# பெரியார் – அம்பேத்கர்:
# இன்றைய பொருத்தப்பாடு

**ஆ.இராசா**
மத்திய அமைச்சர்
தொலைத்தொடர்பு மற்றும் தகவல்தொழில்நுட்பத்துறை

வெளியீடு:
**பெரியார் திராவிடர் கழகம்**
29, இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

**நூல் கிடைக்குமிடம்**

பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம் அருகில்
காந்திபுரம் - கோவை
9843323153

**நன்கொடை : உரு 10.00**

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

www.periyardk.org

பதிப்பு ஆண்டு : 2009 செப்டம்பர் 17



**22.02.2008 அன்று திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மையமும், மகளிரியல் துறையும் இணைந்து நடத்திய "பெரியார் அம்பேத்கர் : இன்றைய பொருத்தப்பாடு" என்ற தலைப்பிலான சிறப்புச்சொற்பொழிவில் பங்கேற்று மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஆ. இராசா அவர்கள் ஆற்றிய உரை.**

பெருமைமிக்க பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பெரியார் உயராய்வு மய்யத்தின் சார்பில் நடைபெறுகின்ற பெரியார் அம்பேத்கர் இன்றைய பொருத்தப்பாடு என்ற தலைப்பிலான இந்தக்கருத்தரங்கத்தினுடைய தலைவர் பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளர் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் அவர்களே, வரவேற்புரை நிகழ்த்தியிருக்கின்ற முனைவர் மணிமேகலை அவர்களே, அறிமுகவுரை ஆற்றியிருக்கின்ற வணக்கத்திற்கும் பெருமதிப்பிற்கும் உரிய சீரிய சிந்தனையாளர் அய்யா எஸ்.வி.ஆர் அவர்களே, பல்கலைக் கழகத் தேர்வு நெறியாளர் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்களே, பெருந்திரளாகக் கலந்துகொண்டிருக் கக்கூடிய பேராசிரியர்களே, எனது அன்புக்குரிய மாணவக் கண்மணிகளே, பத்திரிகையாளர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, அனைவருக்கும் வணக்கம்.

"பெரியார் அம்பேத்கர் : இன்றைய பொருத்தப்பாடு" என்னும் தலைப்பில் ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப் பட்டு அந்தக் கருத்தரங்கத்தில் இவ்வளவு எண்ணிக்கையில் மாணவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பது இன்றைய சூழலில் நான் எதிர்பார்க் காத ஒன்று என்ற காரணத்தினால் நான் உங்களை முதலில் வணங்குகிறேன்.

பெரியாரும் அம்பேத்கரும் பொருத்திப்பார்ப்பதற்கு அப்பால் அவர்கள் இன்றைக்குத் தேவையா என்ற வினா இந்தத் தலைமுறைக்கு முன்னால் வைக்கப்படுகிற இந்தசூழலில் இவ்வளவு எண்ணிக்கையில் மாணவர்கள் ஆர்வத்தோடு வந்திருக்கிறீர்களே என்கின்ற அந்த உணர்வை நான் பெறுகிறபோது பெரியார் அம்பேத்கர் இன்னும் சாகவில்லை அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள், இருக்கப்போகிறார்கள் என்கிற நம்பிக்கையை நான் பெறுகிறேன்.

நம்முடைய சிந்தனையாளர், பெரியவர் எஸ்.வி.ராஜதுரை அவர்கள் இந்த சமூகத்திற்கு வழங்கியிருக்கிற அருங்கொடைகளாக பல்வேறு நூல்களை உங்களில் பலர் அறிந்திருக்கக்கூடும். நான் அனைத்து நூல்களையும் கற்றவன். அவருடைய வாழ்நாளில் இந்த சமூகம் பெரியார் அம்பேத்கர் கொள்கை களையும் தாங்கிப்பிடித்து ஒரு அங்குலமாவது உயர்ந்து விடாதா என்கிற

ஏக்கத்தில் தன் வாழ்நாட்களை வத்திக் குச்சிகளாகக் கிழித்துப் போட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சிந்தனையாளர். எனவே அவர் கூட்டியிருக்கின்ற இந்த நிகழ்ச்சியில் பல்வேறு பணிகளுக் கிடையே உங்களை சந்திக்கின்ற இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய பல்கலைக்கழகத்திற்கு, பதிவாளர் உள்ளிட்ட அனைத்துத்துறைப் பெரு மக்களுக்கும் என்னுடைய நன்றியறிதலை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெரியார் அம்பேத்கர் என்னும் இரு தலைவர்களைப் பற்றிப் பேசுகிறபோது இந்தத் தலைவர்களுக்கிடையே வந்து போகிற சில தலைவர்களைப் பற்றிய விமர்சனம் - மத்தியிலே அமைச்சராக இருக்கிற நான் இந்தத் தலைப்பிலே பேச இருக்கிற காரணத்தினால் - சில தலைவர் களைப்பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக இந்த இருபெரும் தலைவர்கள் சொல்லியதைச் சொல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் மாணவர்களோ, பத்திரிகையாளர்களோ அதைத் தனித்தனியாக அப்படியே பார்க்க வேண்டுமே தவிர அதையே அந்தத் தலைவர்களுக்கு இருக்கிற அடையாள மாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதை என்னுடைய உரையின் தொடக்கத்திலேயே நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால், ஒரு அரசியல் கூட்டத்தில் பெரியாரைப் பேசுவதென்பது வேறு, ஒரு சமூகக் கூட்டத்தில் அல்லது ஒரு பொருளாதாரக் கூட்டத்தில் அம்பேத்கரினுடைய தத்துவங்களை எடுத்துவைப்பதென்பது வேறு. ஆனால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னால் இருபெரும் தலைவர்களைக் கொண்டு வந்து நிறுத்துவது என்பது, அதுவும் ஒரு அரசியல்வாதியாகிய நான் கொண்டு வந்து நிறுத்துவது என்பது வேறு. என்னையும் அறியாமல் இரயில் தடம் புரண்டுவிடுமோ என்ற பயத்தோடு நான் இங்கு நின்றுகொண்டிருக்கிறேன். ஏனென்றால் இந்த இரண்டு இரயில்களும் - பெரியார் அம்பேத்கர் என்கின்ற இரண்டு இரயில்களும் - ஒருகட்டுக்குள் அடங்காத இரயில்கள் எந்த தண்டவாளத்திற்கும் கட்டுப்படாத இரண்டு இரயில்கள். எந்தத் தண்ட வாளத்திற்கும் கட்டுப்படாத இரண்டு இரயில் களை தண்டவாளத்தோடு கூடிய ஒரு போக்கான போக்கிற்கு கொண்டு வந்து நிறுத்துவது என்பது அறிவார்ந்த வேலையா, ஆபத்தான வேலையா என்று எனக்குத்தெரியாது. ஆனால் உத்தரவை எஸ்.வி. ராஜதுரை அய்யா அவர்கள் பிறப்பித்திருக்கிற காரணத்தினால் நான் முயற்சி செய்கிறேன் அவ்வளவு தான்.

ஆங்கிலத்திலே சொல்லுவார்கள் comparision is always odious ஒருவரை இன்னொருவரோடு ஒப்பிடுவது என்பது அவரை புண்படுத்துகிற மாதிரி இருக்கும். நீ இராஜாவைப் போல் இல்லை என்று சொன்னால் அல்லது இராஜா 31 வயதில் 32 வயதில் அமைச்சர் ஆகிவிட்டான் நீ ஏன் அமைச்சர் ஆகவில்லை என்று யாராவது என்னுடைய வகுப்புத் தோழரைப்பார்த்து அவருடைய தாய் தந்தையர் கேட்டால் கேட்பதற்கு இனிப்பாக இருக்கும் ஆனால் அந்த ஒப்புமை odious புண்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆனால்



comparision of values is something productive என்று சொல்லுவார்கள் இரண்டு மனிதர்களின் மதிப்பீடுகளை தனித்தனியாக ஒப்பீடு செய்வதென்பது வேறு, நேரடியாக ஒரு மனிதனை இன்னொரு மனிதனோடு சேர்த்துப் பார்ப்பது என்பது வேறு.

எனவே அந்தக் கோணத்தில் பெரியாரையும் அம்பேத்கரையும் நாம் இங்கே பார்க்க இருக்கிறோம். இதிலே பெரியாரும் அம்பேத்கரும் முரண் பட்டு நிற்கக் கூடிய இடங்கள் கூட உண்டு. பெரியாரையும் அம்பேத்கரையும் முரண்படுத்திப் பார்த்தவர்கள் கூட சில இடங்களில் பெரியாரையும் அம்பேத்கரையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பெரியாரைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்து மதத்தை எழுதியவர். தன் வாழ்நாளெல்லாம் கண்ணன்தான் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று தன்னுடைய கடைசி நாட்களைக் கழித்தவர். இந்து மதத்தைத் தூக்கி நிறுத்தியவர். ஆனால் வாழ்நாளெல்லாம் இந்து மதம் வேண்டாமென்று சொன்ன பெரியார் மரித்த போது அந்தக் கண்ணதாசன் பாடினான்

சரித்திரம் மறைந்த செய்தி தலைவனின் மரணச்செய்தி
விரித்ததோர் புத்தகத்தின் வீழ்ச்சியைக் கூறும் செய்தி
நரித்தனம் கலங்கச்செய்த நாயகன் மரணச் செய்தி
மரித்தது பெரியாரல்ல, மாபெரும் தமிழர் வாழ்க்கை

என்று முடித்தான். கடவுளை நம்புகிற, இந்துமதத்தைப் போற்றுகிற கண்ணதாசனே கூட பெரியார் மரித்துப் போனதற்குப் பிறகு மரித்தது பெரியாரல்ல மாபெரும் தமிழர் வாழ்க்கை என்று சொன்னார் என்றால் கண்ணதாசன் இருவிதமான கோணங்களைப் பெற்றிருக்கிறார் என்றாலும் பெரியாரை மதித்திருக்கிறார் என்று பொருள். அதைப்போல அம்பேத்கரை விமர்சனம் செய்தவர்கள் இருக்கிறார்கள். கடவுள் பெயரை நாக்கிலும், கட்டாரியைக் கக்கத்திலும் வைத்திருக்கிற ஒரு ஆளுக்குப் பெயர் மகாத்மா என்றால் a person who is keeping god's name in his tongue, keeping knife in his armpit is deserved for appellation of Mahatma, then Mohandass Karamsanth Gandhi is also a Mahatma என்று அம்பேத்கர் சொல்கிறார் கடவுள் பெயரை நாக்கிலும், கட்டாரியைக் கக்கத்திலும் வைத் திருக்கிற ஒரு ஆளுக்குப் பெயர் மகாத்மா என்றால் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியும் மகாத்மாதான் என்று கொடூரமான விமர்சனத்தை முன்வைத்தவர் அம்பேத்கர். ஆனால் அந்த அம்பேத்கரைப் பார்த்து நீங்கள் ஒரு மிகப்பெரிய தேசபக்தர் உங்களைப் போன்ற ஒரு தேசியவாதியை நான் பார்த்ததில்லை என்று காந்தி சொல்லுகிறார். அதனால்தான் சொல்லுகிறேன் comparison is sometimes odious ஒப்பீடு என்பது சில நேரங்களில் புண்படுத்தும் எனவே, அவரை அவராகவே பார்ப்பது என்ற அந்தக் கோணத்தில்தான் இந்தக் கருத்தரங்கில் நான் கலந்து கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு

தலைவர்களும் தன்னைப்பற்றி பரிசோதனை செய்து கொண்டவர்கள். சுயவிளம்புகை செய்து கொண்டவர்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், பெரியார்

“நான் யார்? ஈ.வே.இராமசாமி என்கிற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகத்திலே இருக்கிற பிற சமுதாயத்தைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்குகிற தொண்டினை மேற்போட்டுக் கொண்டிருக்கிறேன். இந்தத் தொண்டினைச் செய்வதற்கு எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ ஆனால் இதை செய்வதற்கு வேறு யாரும் முன்வராத காரணத்தினால் நான் செய்து கொண்டிருக்கிறேன்”.- இது பெரியார் தன்னைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிற சுய பிரகடனம். அதைப்போல் அம்பேத்கர் ஒரு இடத்தில் சொல்லுகிறார்:

I am not a worshipper of idol -நான் சிலைகளை, கடவுளை வணங்குகிறவன் அல்ல. I believe destruction of idols - நான் கடவுளை சிலைகளை அழிப்பதை ஒரு தொழிலாக நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறவன். என்று சொல்லிவிட்டு மீண்டும் சொல்கிறார். மீண்டும் அவர் சொல்லுகின்றார்:

I hate Gandhi and his philosophy of Hinduism நான் காந்தியையும் அவர் சார்ந்திருக்கிற இந்துயிசத்தையும் வெறுக்கிறேன் ஏனென்றால் காந்தியைப் பாராட்டுவது என்பது வேறு, தேசத்திற்கு நலன் செய்வது என்பது வேறு, வேறு வேறு மட்டுமல்ல சில நேரங்களில் இவை எதிரும் புதிருமாக இருக்கின்றன என்று அவர் சொல்கிறார். I love india அதனால்தான் சொல்லுகிறார் worship of Gandhi and loving this nation are two distinct and different things and sometimes afford equally opposite என்று குறிப்பிடுகிறார். ஆக இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் இரண்டு தலைவர்களும் இந்த மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள். இன்னொன்று இன்றைக்குப் பெரியார் யார், அம்பேத்கர் யார் என்கின்ற சிந்தனையில் இந்த இரண்டு தளத்திலும் சில வேறுபாடுகளைக் கொண்டு வருகிறார்கள். பெரியாருக்குள்ளும் அம்பேத்கருக்குள்ளும் போகிற போது நாம் மிகத்தெளிவாக இருக்க வேண்டும். இரண்டு பேருக்கும் ஓர்மை உண்டு. இருவரும் ஒன்றாகச் சிந்தித்த இடங்கள் உண்டு. இரண்டு பேருக்கும் வேறுபாடுகளும் இருக்கிறது. நாம் மறுதலித்துவிட முடியாது.

பெரியார் எந்தப் பற்றுக்கும் ஆட்படாதவர், எந்தப் பற்றுக்கும் ஆட்படாத தன்னை திராவிட சித்தாந்தம் என்ற சட்டகத்துக்குள் வைத்துக் கொண்டது உண்மைதான். ஆனால் அம்பேத்கருக்கு அந்தக் கட்டாயம் தேவைப்படவில்லை. இன்னும் நான் சொல்லவேண்டுமென்று சொன்னால் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு தந்தை பெரியாருக்கு



இரண்டு மூன்று காரணங்கள் இருந்திருக்கிறது. ஆனால் இந்திதான் இந்த மண்ணிற்கு ஆட்சிமொழியாக, பொது மொழியாக இருக்க வேண்டுமென்று பதிவு செய்தவர் அம்பேத்கர். வேறுபாடுதான். புரிந்து கொள்ள வேண்டும்.

I need a strong centre என்று சொன்னவர் அம்பேத்கர். மிக முக்கியமான இடத்திலிருக்கிற மய்ய அரசுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்று சொன்னவர் அம்பேத்கர். ஆனால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று போராடிய இயக்கங்களுக்கு தந்தையாக இருந்தவர் தந்தை பெரியார். இவையெல்லாம் இருக்கின்ற வேறுபாடுகள். ஒரு காலகட்டத்தில் “தமிழ்நாடு தமிழருக்கே” என்று கேட்டவர் தந்தை பெரியார். அப்படிப் பட்ட பிரிவினையை அம்பேத்கர் ஒரு நாளும் ஏற்றுக்கொண்டதில்லை. ஏனென்றால் அந்தத் தளத்தில் அவர் இயங்குகிற போது , தலித் விடுதலை என்று வருகிறபோது அல்லது மானிட விடுதலை என்று வருகிறபோது இந்த பூகோள அமைப்பு என்கின்ற எல்லைக்கோடுகளைத் தாண்டி, தான் எந்த இனம் என்கின்ற அடையாளத்தைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. திராவிட இன அடையாளத்தைக்கூட தந்தை பெரியார் ஒரு பெருமைமிக்க அடையாளமாகச் சொல்லிக்கொள்ளவில்லை.

நான் இந்த இடத்திலே ஒன்றைச் சொல்லவேண்டும். கண்ணகிக்குச் சிலை வைத்தபோது தந்தை பெரியார் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் பெண்களை அடிமைப்படுத்துகின்ற ஒரு weapon, ஒரு கருவி கற்பு, கற்பு என்றால் அது ஆணுக்கும் இருக்க வேண்டும். நான் என்ன விதமான ஒழுக்கத்தை என்ன விதமான நடத்தையை இராஜதுரை அவர்கள் என்மீது காட்டவேண்டுமென்று எண்ணுகிறேனோ அதை நான் அவரிடத்திலேயும் காட்டவேண்டும், மற்றவருக்கும் காட்டவேண்டும். அது தான் கற்பு, அதுதான் ஒழுக்கம், ஒழுக்கத்துக்கு ரொம்ப எளிமையாக விளக்கம் சொன்னார் பெரியார்: “நான் உன்னிடம் என்ன எதிர்பார்க்கிறேனோ அதை நீ என்னிடம் எதிர்பார்ப்பதற்கும் இன்னொருவனிடம் நான் எதிர்பார்ப்பதற்கும் ஒன்றாக இருக்கவேண்டும். இதுதான் ஒழுக்கம்”. அந்த அடிப்படையில் கண்ணகிக்கு சிலை வைப்பதைக்கூட தந்தை பெரியார் விமர்சித்தார். ஆனால் அண்ணா வேறு விதமாகச் சொன்னார். கற்பு உண்டா இல்லையா என்பது வேறு, கண்ணகி கற்புக்கு அரசியா என்பது வேறு , ஆனால் இந்த மண்ணில் ஒரு கலாச்சாரப் படையெடுப்பு நடந்திருக்கிறது. ஒரு உயர்ந்த செம்மாந்த வாழ்க்கை, ஒருவனுக்கு ஒருத்திதான் வாழ வேண்டுமென்கின்ற வாழ்க்கை . ஒரு வேளை விதவையாகிவிட்டால் அந்த விதவையை மறுமணம் வேண்டுமென்கின்ற உரிமைகூட இந்த தொல் சமுதாயத்தில் இருந்திருக்கிற இந்த தமிழ் சமுதாயத்தில் திடீரென்று “ஐவனுக்கும் தேவி அழியாத பத்தினி” என்று திரௌபதி அம்மனுக்குக் கோயில் கட்டவேண்டிய அவசியம் என்ன? இந்தக் கலாச்சாரப் படை யெடுப்பை மறுப்பதற்காகத்தான் கண்ணகிக்கு நான் சிலை வைக்கிறேன். கண்ணகிக்கு சிலை இந்த திராவிட இயக்கத்திற்கு

அவசியப்பட்டதற்குக் காரணம், இது எங்கள் அடையாளம், இது எங்கள் நாகரீகம், இது எங்கள் பண்பாடு, வரலாறு என்று சொல்வதற்கு ஒரு அண்ணா இந்த மண்ணிற்கு அவசியப்பட்டதாக அண்ணா கருதிக்கொண்டார். எனவே திராவிட சட்டகம் என்கின்ற சட்டகத்திற்குள் பெரியார் தன்னை அடக்கிக் கொண்டதற்குக் காரணம் ஆரியருக்கு எதிர்ப்பு, இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் பிராமணர்களுக்கு எதிர்தளத்தில் இயங்குவதற்கு ஒரு அடையாளம் தேவைப்பட்டது அவ்வளவு தான். அதற்காக திராவிடர் அல்லாத ஒரு சமுதாயம் இந்த மண்ணிலே வாழக்கூடாது என்றோ, அவர்களுக்கு உரிமையற்றுப் போய்விடவேண்டுமென்றோ பெரியார் ஒரு போதும் கருதியவர் அல்ல.

எனக்கு மொழிப்பற்று கிடையாது, நாட்டுப்பற்று கிடையாது, தேசியக்கொடி என் கோவணத் துணி, இந்திய வரைபடத்தை எரிப்பேன் என்று எதையெல்லாம் எரிக்கமுடிந்ததோ அதையெல்லாம் செய்தவர் தந்தை பெரியார். இன்னும் கூட நான் சொல்லுவேன். ஒரு காலத்தில் இந்த நாட்டின் மீது சீனா படையெடுத்து வந்த போது இந்த நாட்டிலுள்ள தலைவர்களெல்லாம் துண்டேந்தி வசூல் செய்தார்கள். திராவிட முன்னேற் றக் கழகத்தினுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா உட்பட. ஆனால் பெரியார் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. நான் கர்ப்பக்கிரகத்திற் குள்ளே போகிறேன் என்று சொன்னார். பத்திரிகையாளர்கள் கேட்டார்கள், சீனா படையெடுத்து வருகிறது, நாடு பறிபோகிறது, நீங்கள் இப்போதுதான் ஜாதியை ஒழிக்கிறேன். மதத்தை ஒழிக்கிறேன் என்கிறீர்களே என்று கேட்ட போது பெரியார் சொன்னார்:

“ஒரு வேளை சீனாக்காரன் படையெடுத்து வந்து என்னுடைய சூத்திரப்பட்டம் போகுமானால், பற, பள்ளு பட்டம் போகுமானால் அவனையும் வரவேற்பதற்கு நான் தயார்”

என்று சொல்லுவதற்கு ஒரே ஒரு தலைவன் தான் இந்த மண்ணிலே இருந்தார். எனவே இருவரும் வேறுபட்ட அடையாளங்களோடு இருந்த தலைவர்கள். அம்பேத்கர் தேசியத்தை விரும்பியவர், பெரியார் தேசியத்தை விரும்பியவர் அல்ல. தேசியம் ஒரு கற்பிதம் என்று சொன்னவர், நாட்டுப் பற்று பொய் என்று சொன்னவர், நேற்றுவரை பாகிஸ்தான் நம்மோடு இருந்தது, நாளைக்கு அது பிரிந்துபோய் விட்டால் அதன்மீதும் நாட்டுப் பற்று உனக்கு வருமா எனக் கேட்டவர். எனவே பெரியாருக்கு நாட்டுப்பற்று கிடையாது, பெரியாருக்கு மொழிப்பற்று கிடையாது. உண்மையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையேகூட தமிழ் மேல் இருக்கிற காதலால் தந்தை பெரியார் செய்யவில்லை, இந்தி இங்கு வந்துவிடக்கூடாதே என்கின்ற அந்த வேகத்தில்தான் தந்தை பெரியார் செய்கின்றார். அதற்கு ஒரு அருமையான தலையங்கத்தையே தீட்டினார். தந்தை பெரியார் எழுதிய தலையங்கங்களிலே



ஒன்று இரண்டு உணர்ச்சிப்பூர்வமானவை. நாகம்மை மறைந்த போது எந்தக் கணவனும் அப்படி எழுத முடியாது. தன்னுடைய துணைவி யார் மறைந்த பொழுது எழுதினார்:

“எனக்கு இருக்கிற ஒரே தடையும் போய்விட்டது, என்னுடைய சுகம் போய்விட்டது எனச் சொல்வேனா? சொத்துப் போய்விட்டது எனச் சொல்வேனா? எனக்கு இருந்த ஒரே ஒரு நலன் போய்விட்டது என்று சொல்வேனா? நாகம்மை வாழ்ந்தது எனக்காகவே தவிர தனக்காக அல்ல” என்றெல்லாம் குறிப்பிட்டு விட்டுச் சொல்கிறார்:இருந்தாலும் ஒழிந்தது, இன்றோடு எனக்கிருந்த ஒரு தடை ஒழிந்தது. இனிமேல் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக என் வாழ்நாட்களை அர்ப்பணிக்கப்போகிறேன்.

மனைவி இறந்தபோது கூட இப்படி ஒரு கட்டுரையை ஒரு தலைவனால் எழுத முடியுமென்கின்ற வரலாறு பெரியாருக்கு உண்டு. அந்தப் பெரியார் மறைமலையடிகளுக்கு ஒரு முறை ஒரு கடிதம் எழுதினார்:

நான் உங்களைப் பல்வேறு விதமாக விமர்சித்திருக்கிறேன். உங்களுடைய சைவக்கோட்பாடு மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்கள் பேசுகின்ற தனித்தமிழ் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால் தனித்தமிழ்க் கோட்பாடு என்பது பிராமணர்களுக்கு எதிராக சைவ வேளாளப் பண்பாடு என்கின்ற தளத்தோடு நின்று போய்விட்டது. தனித் தமிழ் இயக்கம் தேவைதான். தனித்தமிழ் இயக்கம் எதுவரை வந்தது என்றால் மொழியைப் பிரித்துப் பார்த்ததே தவிர கீழே இருக்கிற ஜாதி ஒழிய வேண்டுமென்று விரும்பவில்லை. அது சைவ வேளாளப் பண்பாடு என்கின்ற அந்தத் தளத்தோடு தனித்தமிழ் இயக்கம் நின்று போய் விட்டது. இதை தந்தை பெரியாரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், உங்கள் மீது எனக்கு நிறைய கருத்து மாறுபாடு உண்டு, உங்களோடு உடன்படாத தளங்கள் நிறைய உண்டு, என்றாலும் தமிழை நாம் காப்பாற்றவேண்டியதற்குக் காரணம், தமிழர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை இழந்து விடுவார்கள், தமிழ் மொழி இல்லாவிட்டால் தமிழ் மக்கள் சுபிட்சமாக வாழமுடியாது என்பதற் காக உங்களை அழைக்கிறேன். கடந்த காலத்தில் தவறு செய்திருந்தால் அய்யா அவர்கள் மன்னித்து அருளுங்கள் என்று எழுதியவர் தந்தை பெரியார். ஆக நான் இவ்வளவு பூடகம் போட்டுப் பேசுவதற்குக் காரணம், அம்பேத்கர் இயங்கிய தளம் வேறு, தந்தை பெரியார் இயங்கிய தளம் வேறு, இவர் களுக்குள் இருக்கிற ஓர்மை வேறு இடத்திலே வருகிறது. எதிலே வருகிறது?

எஸ்.வி.ஆர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். Annihilation of Caste என்கின்ற புத்தகத்தைப்பற்றி. Genesis, Mechanism and Development of Caste in India என்ற கட்டுரையை அவர் எழுதுகிற போது அவருக்கு வயது 25. 25 வயதில் ஒரு இளைஞன் இப்படி ஒரு ஆராய்ச்சிக்

கட்டுரையை எழுத முடியுமா என்று இதுவரை யாருக்கும் தெரியாது. அவரால் பயன்படுத்தப்பட்ட மேற்கோள்கள் எவ்வளவு என்பதை இதுவரை ஆழம் பார்த்தவர்கள் இல்லையோ என எண்ணுகிற அளவுக்கு அம்பேத்கரினுடைய அறிவுநுட்பம் அந்த நூல்களில் வெளிப்படுகிறது.

இன்னும் சொல்லப்போனால் 1857 இல் 1856 இல் சிப்பாய்க் கலகம் நடந்த பொழுது மதவிவகாரங்களில் நாங்கள் தலையிட மாட்டோம் என்று வெள்ளைக்காரர்கள் இந்தியத் தலைவர்களுக்கு எழுதிக்கொடுத்தார்கள். பன்றிக் கொழுப்பை துப்பாக்கியிலே வைத்ததாகச் சொல்லப்பட்ட பொழுது அதை இஸ்லாமியர்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்று சொன்னபோது ஒரு மிகப்பெரிய இராணுவக்கலவரம் வெடித்தது. சிப்பாய்களுக்குள் கலகம் வந்த பொழுது வெள்ளைக்கார அரசாங்கம் ஒரு ஒப்புதலுக்கு வந்தது, உங்களுடைய மத விவகாரங்களில் நாங்கள் தலையிட மாட்டோம் என்று . Genesis, Mechanisism and Development of Caste in India ஜாதியினுடைய தோற்றமும் வளர்ச்சியும் அது இயங்குகிற முறையும் என்று ஒரு புத்தகத்தை அம்பேத்கர் 1916 இல் எழுதுகிறார். இந்தியாவில் முதன் முதலாகத் தடைசெய்யப்பட்ட ஒரு புத்தகம் வெள்ளைக்கார அரசாங்கத்தால் உண்டு என்று சொன்னால் அதுதான் அந்தப் புத்தகம். இந்தியாவில் முதன்முதலாகத் தடைசெய்யப்பட்ட அம்பேத்கரின் புத்தகம்தான் வெள்ளைக்கார அரசாங்கத்தால் ஒரு இந்தியர் எழுதி முதன்முதலில் தடை செய்யப்பட்ட புத்தகம். அந்தப் புத்தகத்தைத் தடைசெய்ய வேண்டுமென்று Privy Council என்று சொல்லப்படுகிற உச்சநீதி மன்றம் வரை சென்றனர். இன்றைக்கு உச்சநீதி மன்றம் டெல்லியிலே இருக்கிறது. ஆனால் அன்றைக்கு உச்சநீதி மன்றம் Privy Council என்று சொல்லப்பட்ட, இங்கிலாந்திலே இருந்த அந்த உச்சநீதிமன்றம் வரை சென்று அந்தப் புத்தகத்திற்குத் தடை வாங்கினார்கள் இங்கே இருக்கின்ற பிராமணர்கள். ஏனென்றால் அதிலேதான் ஜாதி எப்படித் தோன்றியது ? அது இயங்குகிற காரணத்தினால் என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன? என்று சொன்னார். அதிலே ஒரு இடத்திலே சொல்லுவார் Hindus are the only people in the world whose relation between man to man has been consecrated as sacred, eternal and inviolative. உலகத்திலே வேறுபாடுகள் இருக்கிறது. பிளாட்டோ எழுதிய "குடியரசே"" Division of Labour தான். Division of Labour என்பது வேறு , Division of Labourers என்பது வேறு. தொழிலைப் பிரிப்பதென்பது வேறு, தொழிலாளர்களைப் பிரிப்பதென்பது வேறு. தொழிலைப் பிரித்தார்கள் மேலை நாடுகளில்,

நான்கூட ஒருமுறை வெளிநாட்டிற்குச் சென்றிருந்தேன். வெளிநாட்டிற்குச் சென்றிருந்து, ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையிலே நான் தங்கியிருந்த போது , திடீரென்று கதவைத் தட்டினார்கள் மாணவர்கள். மாணவர்கள் என்று தெரியாது. இளம் பிராயத்திலே இருக்கின்ற பெண்கள்,



ஆண்கள் எல்லாம் திடீரென்று கதவைத் தட்டினார்கள். உங்கள் அறையைச் சுத்தம் செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். எனக்கு ஒரு சந்தேகம். யாரைப் பார்த்தாலும் நமது இந்தியன் புத்தி இருக்கிறதே நமக்குள் தெருக்கூட்டி என்றால் இப்படித்தான் இருப்பான், தோட்டி என்றால் இப்படித் தான் இருப்பான்., என்று நம்மையும் அறியாமல் நமது மூளைக்குள் இருக்கிற புத்தி அங்கே வெளியே வந்தது. நீங்களெல்லாம் யார்? உங்களுக்கு எவ்வளவு சம்பளம் தருகிறார்கள் என்று அவர்களைப் பார்த்து நான் கேட்டேன். அவர்கள் உடுத்தியிருந்த உடை, அவர்கள் வந்த நாகரீகம், அவர்கள் பழகிய பண்பாடு இவற்றையெல்லாம் பார்த்து எவ்வளவு உங்களுக்கு சம்பளம் என்று கேட்டேன். முதலில் அவர்கள் கேட்ட கேள்வி, Are you Indian? நீ ஒரு இந்தியனா? என்று கேட்டார்கள், பரிகாசத்தோடு. ஏன் என்று கேட்டேன். இந்தியாவில்தான் கூட்டுவதற்கும், கழுவுவதற்கும் ஒரு ஜாதி இருக்கிறது என்று கேள்விப்பட்டோம், நாங்கள் பக்கத்திலே இருக்கிற மருத்துவக்கல்லூரியினுடைய மாணவர்கள், இந்த ஓட்டலைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறோம். ஒரு முறை பகலிலும், இரவிலும் சுத்தம் செய்து விட்டுப் போனால் எங்களுக்கு பாக்கெட் மணி இத்தனை டாலர் கிடைக்கிறது. இதைத்தான் நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம் என்று சொல்லுகின்ற மனப்பாங்கு அந்த நாட்டில் இருக்கின்றது.

எனவே அங்கு சலவைத் தொழிலாளி இருக்கிறான். ஆனால் பிறப்போடு அது முடிச்சுப்போடப்படவில்லை. அங்கே தச்சன் இருக்கிறான், ஆனால் பிறப்போடு அது முடிச்சுப் போடப்படவில்லை. அங்கே செருப்புத் தைக்கிற தொழிலாளி இருக்கிறான். ஆனால் அவன் பிறப்போடு முடிச்சுப்போடப்படவில்லை. இன்றைக்குச் செருப்புத் தைக்கிற தொழிலாளி நாளைக்குத் தன்னுடைய தொழிலை மாற்றிக் கொள்ளுவார். அதனால்தான் சொன்னார், Division of Labour என்பது வேறு , Division of Labourers என்பது வேறு. அம்பேத்கர் சொல்லுவார்:

Hindus are the only people in the world whose relation between man to man has been consecrated by the religion as inviolative and eternal. ஒருமுறை ஒருவன் பிறந்து விட்டால் மாற்றமுடியாது. நீ இந்த ஜாதி என்று பிறந்து விட்டால் நான் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மாற்ற முடியாது.

அய்யா கிண்டலாகச் சொல்லுவார். இந்து யார் என்று விளம்பரம் சொல்லுகிற போது, இந்து யாரென்று அரசியல் சட்டத்திலே, நம்முடைய இந்து லாவிலே சொல்லுகிறபோது, யார் இந்து என்று சொன்னால் அய்யா சொல்லுகிறார்:

"ஆடு எதுன்னு கேட்டா எதுன்னு நீ சரியாச் சொல்லனுமில்ல? எது

மாடு இல்லையோ, எது கோழி இல்லையோ, எது கொக்கு இல்லையோ அதெல்லாம் ஆடு ன்னு சொன்னா அவன் பைத்தியக்காரன்ல?'' அது மாதிரின்னு சொன்னார். அதுவரைக்கும் புரியல நமக்கு. அய்யா சொல்றார், இந்துன்னா யாருன்னு இவன் சொல்லணுமில்ல?

Those who are not Muslims, those who are not Christians, those who are not Persians, those who are not Jews, they are Hindus.யாரெல்லாம் முகம்மதியன் அல்லவோ, யாரெல்லாம் கிறிஸ்துவன் அல்லவோ, யாரெல்லாம் பார்சியன் அல்லவோ, யாரெல்லாம் அவனல்லவோ, இவனல்லவோ அவனெல்லாம் இந்து.

இதைத் தாண்டி இன்னொருவன் பிறக்கமுடியாது இந்த மண்ணில். இந்த முடிச்சை கொண்டு வந்த சேர்த்த இழிவு , பெருமை எது என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அது இந்த இந்துமதத்திற்குத் தான் உண்டு. இதைத்தான் தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும் ஒரே இடத்தில் நின்று சொன்னார்கள்.

தந்தை பெரியார் பிராமணீயம் என்று எடுத்துக்கொண்டிருக்கக் கூடாது, இந்துத்துவா என்றுதான் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் படித்துப் பார்த்தவரை, அய்யா எஸ்.வி.ஆர் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள், பிராமணியத்திற்கும், இந்துத்துவா விற்கும் ஒரு மிகப்பெரிய வித்தியாசமில்லை. இரண்டும் ஒன்றுதான். ஒரு சமூகத்தைப் படைத்து அந்த சமூகம் இப்படித்தான் வாழவேண்டுமென்பது மட்டுமல்ல, அவர்களைப் படிக்காதே என்று சொன்ன சமூகம் உலகத்திலே இன்னொரு சமுதாயம் இல்லை. இன்னும் கூட அம்பேத்கர் ஒருமுறை ஆய்வு செய்கிறார். The caste system in India is not virtually visible இந்த அரங்கத்திலே இருக்கிற யாரையாவது பார்த்து வன்னியர் யார்? ஆதிதிராவிடர் யார்? கவுண்டர் யார்? பள்ளர் யார்? என்று நிறம் பிரிக்க முடியுமா? இந்த முகத்தைப் பார்த்து யாரையாவது ஜாதி சொல்ல முடியுமா உங்களால்? வேறுபாடு இருக்கிறது என்பது வேறு. Racial difference என்று சொல்லுவார்கள். ஒரு இன வேறுபாடு என்பது முகத்திலேயே தெரியும்.

நீக்ரோக்களைப் பார்த்தால் தெரியும். நீக்ரோக்கள் எவ்வளவு அல்லல் பட்டிருக்கிறார்கள்? world owes a duty to untouchables as it is declared to other communities in the world என்று அம்பேத்கர் ஒரு இடத்திலே சொல்லுவார். உலகத்திலே நீக்ரோவை எப்படிப் பார்த்தீர்களோ, உலகத்திலே வேறு விதமான இன ஒடுக்கல் முறையை எப்படிப் பார்த்தீர்களோ, அப்படிப்பட்ட இன ஒடுக்கல் முறைதான் இந்தியாவில் இருக்கிறதென்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அது தெரியவில்லை நமக்கு. அவ்வளவு தான். ஒரு நீக்ரோவைப் பார்த்தால் தெரியும், வெள்ளைக்காரன் இவன், கருப்பன் இவன்,



இவனுக்கு கஷ்டம் இருக்கிறது என்று சொல்லலாம். நீக்ரோக்கள் படும் கொடுமையை பெஞ்சமின் மொலாய்சியஸ் என்கின்ற கவிஞன் ஒருமுறை சொன்னான். ஒரு கருப்புப் பெண்மணியை நீதிமன்றத்துக்கு அழைத்து வருகிறார்கள், அந்தக் கருப்பு இனப் பெண்மணி வெள்ளைக்காரப் போலீஸ்காரர்களால் கைது செய்யப்பட்டு காவல்நிலையத்தில் கொடுமைப்படுத்தப்படுகிறாள். எப்படிக் கொடுமைப் படுத்தப்படுகிறாள் என்பதை நீதிமன்றத்திலே பெஞ்சமின் மொலாய்சியஸ் என்கின்ற சிந்தனையாளன் தன்னுடைய கருத்தை சொல்லுகிற போது நீதிமன்றக் காட்சி வாயிலாகச் சொல்லுவான். ஒரு கருப்பு இனப் பெண்ணை நீதி மன்றத்திற்கு கூட்டி வருகிறார்கள். நீதிபதி கேட்கிறார்:

''அம்மா, சிறையில் உன்னை யாராவது கொடுமைப் படுத்தினார் களா? இல்லை, எந்தக் கொடுமையும் படுத்தவில்லை. நன்றாகச் சொல் கொடுமைப்படுத்தினார்களா? இல்லை. அய்யா எனக்கு எந்தக் கொடுமை யும் நடக்கவில்லை. ஆனால் ஒன்று, என் அருகிலே இருக்கிறானே இந்தப் போலீஸ்காரன் அவனுடைய தடிக்கு மட்டும் விந்து பாய்ச்சுகிற ஆற்றல் இருந்தால் நான் இந்நேரம் ஒரு குழந்தைக்குத் தாய்''. நீதிபதிக்குப் புரிய வில்லை. அப்படியானால் எவ்வளவு பெரிய கொடுமையை அந்தப் போலீஸ்காரர்கள் அந்தப் பெண்ணுக்கு செய்திருக்கிறார்கள் என்பதிலிருந்து அந்த இன ஒடுக்கலினுடைய அடர்த்தியை உங்களால் அறிய முடியும்.

அம்பேத்கர் சொல்லுகிறார்: இந்த ஒடுக்கலைக் காட்டிலும் எங்கள் நாட்டில் இருக்கிற ஜாதிய ஒடுக்குமுறை கொடுமையானது. ஆனால் இதைச் சொல்லாமல் பார்த்துக்கொள்கிற வேலையை பிராமணீயம் இங்கே செய்து கொண்டிருக்கிறது. அதனால்தான் அவங்க அக்ரிமென்ட் போட்டாங்க. எந்த இடத்திலே தந்தை பெரியாருக்கும் அண்ணல் அம்பேத்கருக்கும் ஓர்மை வருகிறது என்று சொன்னால், முதல்ல சுதந்திரம் வேணான்னு சொன்னது ரெண்டுபேர்தான். இன்னும் சொல்லப்போனால் 1927 இல் சைமன் கமிஷன் வருகிறது. 1919 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை எப்படித் திருத்தலாம் என்பதற்காக சைமன் கமிஷன் வந்த போது, இங்கே இருக்கிற காங்கிரஸ் காரர்கள் சைமன் கமிஷனே வெளியேறு என்று சொல்லுகிறார்கள். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் போலித்தனமானது. இந்தியாவில் யாரும் இந்தியர்கள் அந்தக் குழுவிலே இல்லை என்று சொன்னார்கள். அது அல்ல நோக்கம். சைமன் கமிஷன் எதற்காக வந்தது என்றால், இந்தியாவில் ஜாதி என்றால் என்ன? எத்தனை ஜாதி இருக்கிறது? ஏன் இவர்கள் படிக்க வைக்கப்படாமலிருக்கிறார்கள்? ஏன் இவர்கள் நாகரீகம் இல்லாமல் இருக்கிறார்கள்? இவர்களுக்கு யார் காரணம்? என்பதைக் கண்டறிய வேண்டிய சூழ்நிலை கமிஷனுக்கு தேவைப்பட்டது. அம்பேத்கர் இன்னொரு இடத்தில் சொல்லுகிறார்.

No intellectual class in the world has prostituted its intelligence to invent a philosophy to keep its fellowmen in perpetual state of imbalance and poverty as Brahmin community has done in India உலகத்திலே இருக்கிற எந்த முன்னேறிய ஜாதியும், மேட்டுக்குடி ஜாதியும், தான் வளரும் சுரண்டும் உண்மைதான். ஆனால் படிக்காதே. வறுமையிலும், ஏழ்மையிலும் இரு என்பதற்காக கடவுளின் பெயரால் ஒரு தத்துவத்தைக் கண்டுபிடித்து அந்த தத்துவத்தைச் சுமத்தி ஒரு மிகப்பெரிய சமுதாயத்தை 95 பேர் இருக்கிற சமூகத்தை அறியாமையிலும், ஏழ்மையிலும், கல்வியறி வில்லாமலும் வைத்திருக்கிற ஒரு கொடுமைக்குச் சொந்தக்காரர்கள் யாரென்று சொன்னால் இந்தியாவில் பிராமணர்களைத் தவிர வேறு யாரும் கிடையாது.

இது அம்பேத்கர் அவர்கள் சொன்னது. இதைத் தான் அய்யா அவர்கள் சொன்னார்கள். உலகத்திலே எந்த தேசத்திலேயும் இப்படி இல்லையே, வேற்றுமைகள் இருக்கிறது. ஆனால் அந்த வேற்றுமைகளை பிறப்போடு முடிச்சுப் போடவில்லையே என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். ஆக அந்த இரண்டு பேருக்கும் இருக்கின்ற ஒற்றுமை என்ன என்று சொன்னால், இந்து மதத்தை எதிர்ப்பது. அதற்குக் காரணம், மனிதனை மனிதனாகப் பார்ப்பது. அது ஒரு விதம். மேலெழுந்த வாரியாகப் பார்க்கின்ற போது, மார்க்சிய கண்ணோட்டத்தில் பார்த்தால் இரண்டு பேரும் பொருள் முதல் வாதிகள். ஒரு பொருள்முதல்வாதிக்கு இருக்கவேண்டிய அடிப்படை யான பண்பு என்ன என்று சொன்னால், இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை இயற்கையாகவே பார்ப்பது. சிம்பிளா சொன்னா அவ்வளவுதான். மெட்டீரியலிசம்னா போட்டுக் குழப்பிகிட்டு இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. மெட்டீரியலிசம்னு சொன்னா, இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை இயற்கையாகவே பார்ப்பது.

இந்தியாவில் இந்த மார்க்சிய கண்ணோட்டத்தோடு பார்த்த இரண்டு தலைவர்கள் சமூகத்தைப் பார்த்தவர்கள் உண்டு என்றால் பெரியாரும் அம்பேத்கரும்தான். வேறு எந்த கம்யூனிஸ்ட்காரர்களும் கிடையாது. எஸ்.ஏ.டாங்கேவே, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மிகப்பெரிய தலைவர் எஸ்.ஏ. டாங்கேவே வேதத்திலிருந்து தான் கம்யூனிசம் வந்ததுன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு. வேதத்துக்கும் கம்யூனிசத்துக்கும் என்ன சம்மந்தம்? இன்றைக்கு இருக்கின்ற இந்த மேடையில் நின்று கொண்டு சொல்கின்றேன். பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் பொருத்தப்பாட்டைப் பற்றி இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கின்றோம். ஒரு கால கட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் பெரியாரையும் அம்பேத்கரையும் ஏற்றுக்கொள் ளாதவர்கள். ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்றால் இவர்களுடைய வாழ்க்கைத் தளம், இவர்களுடைய நெறி எல்லாம் ஒரு சின்ன சிட்டிகைக்குள் அடைக்கப் படவேண்டியவை என்று கருதியவர்கள். வர்ணபேதம் பேசப்பட வேண்டிய தில்லை என்று கருதியவர்கள். ஆனால் அப்படிப் பேசாமல் இருப்பதற்கு



அவர்கள் மார்க்சியத்தைப் படிக்காமல் போனார்கள் என்பதுதான் உண்மை. 1848 இல் பெரியார் பிறப்பதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் சுதந்திரப் போர் என்கின்ற தலைப்பில் காரல் மார்க்ஸ் எழுதுகிறார். இந்தியாவைப் பற்றி,

பசுவையும் குரங்குகளையும் வணங்குகிற மூடத்தனம் இருக்கின்ற தெற்காசியாவில், குறிப்பாக இந்தியாவில், மனிதனை இன்னொரு மனிதன் கருவியாகக் கருதுகிற தெற்காசியாவில் குறிப்பாக இந்தியாவில் புரட்சி வருவதற்கான சாத்தியக் கூறுகளே இல்லை

என்று 1848 இல் காரல்மார்க்ஸ் சொன்னார். காரல் மார்க்ஸ் சொன்ன அறிவுரையை ஏற்க மறுத்த மார்க்சியவாதிகள் ஏறத்தாழ 150 ஆண்டு களுக்குப் பிறகு இன்றைக்கு தந்தை பெரியாரின் தடியையும், அம்பேத்கரின் கண்ணாடியையும் போட்டுக்கொண்டு அருந்ததியர்களின் மாநாட்டில் உரிமைக்காகக் கலந்து கொள்கிறார்கள் என்றால் பெரியாரும் அம்பேத்கரும் இன்னும் நூறு ஆண்டுகளுக்குத் தேவைப்படுகிறார்கள் என்பதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் இவர்களுக்கு இருக்கிற பொருத்தப்பாடு. இந்துயிசம் என்று வருகிற போது இரண்டு பேரும் ஒரு தளத்தில் நின்றார்கள் . அதற்கு என்ன காரணம்? இரண்டுபேரும் ஒருவிதத்திலே நாத்திக வாதிகள். அம்பேத்கர் தன்னை ஒரு இடத்திலேகூட நாத்திகவாதி என்று வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் இருக்கிற கட்டமைப்பை உடைக்க வேண்டுமென்று விரும்பியவர். பெரியார் இன்னொரு இடத்திலே சொல்லுகிறார்.

நான் நாத்திகன் என்றுகூட சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. நான் தாராளவாதி என்று அவர் சொல்லுகிறார். அதற்கு என்ன காரணமென்றால், பெரியாருடைய நாத்திகம், இன்றைக்கும் சொல்லுகின்றேன். திராவிடர் கழகத்தின் மீது அல்லது பெரியாரின் கருப்புச் சட்டைக்காரர்கள் மீது இருக்கிற மிகப் பெரிய குற்றச்சாட்டு. பெரியார் என்றால் இவர்கள் அறிந்தது, அல்லது பெரியார் என்றால் இவர்கள் அடையாளப்படுத்த விரும்புவது கடவுள் மறுப்பாளராக மட்டும்தான் பெரியாரைப் பார்க் கிறார்கள். மதம் வேண்டாம், கடவுள் வேண்டாம், மோட்சம் இல்லை, நரகம் இல்லை என்று சொல்லுவதற்காக மட்டுமே பெரியார் தேவைப்படுகிறார் என்கின்ற ஒரு வறட்டுத்தனமான நாத்திகத்திற்குள் பெரியாரை அடக்குவதற்கு இன்றைக்கு இருக்கிற பெரியாரிஸ்ட்டுகள் தெரிந்தோ, தெரியாமலோ ஆளாகிறார்கள் அல்லது ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற ஒரு குற்றச்சாட்டில் இருக்கிற உண்மையை நாம் மறுதலிப்பதற்கில்லை.

அதனால்தான் பெரியார் சொல்லுகிறார்: நான் நாத்திகன் என்பதைக் காட்டிலும் ஒரு தாராளவாதி என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி அவர் சொல்லுவதற்குக் காரணம் , பெரியாரின் நாத்திகம் சமூகம் சார்ந்தது. அறிவியல் பூர்வமாக அணுகி கடவுள் இல்லை என்று சொல்லு வது வேறு. பெரியார் சொல்லுகிறார்:

மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது, கண்ணில் படக்கூடாது , தொட்டால் தீட்டு, நடந்தால் தீட்டு என்று சொல்லுகின்ற ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, சண்டமாருதத்தால் துகளாக்கப்படாமலோ, சமுத்திரம் பொங்கி எழுந்து அமிழச் செய்யாமலோ இருப்பதைப் பார்த்த பிறகும்கூட கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்றால் அதை எப்படி நான் நம்புவது? என்று கேட்டார். எனவே பிரச்சனை கடவுளுக்கும் பெரியாருக் கும் அல்ல. இந்த சமூகத்தின் மீது பெரியாருக்கு அக்கறை இருக்கிறது. ஜாதிப் பிரச்சனையைப் பெரியார் தொடுகிற போது கடவுள் குறுக்கே வருகிறார். என்ன காரணம் ஏன் இப்படி இருக்கிறாய் என்று கேட்ட போது, இல்லை இப்படித்தான் சாஸ்திரம் சொல்லுகிறது என்ற விளக்கம் சொல்லப்பட்டது.

அதனால் தான் அம்பேத்கர் Annihilation of Caste என்ற புத்தகத்திலே சொன்னார், You must take the stand that Buddha took; You must take the stand that Guru Nanak took; those leaders who not only denied the sastras and also the authorities of sastras. வேதங்களை மறுப்பது மட்டுமல்ல, வேதங்களுக்கு ஆதாரமாக இருக்கிற எல்லாவற்றையும் நீ அறுத்துவிடு என்று Annihilation of Caste இல் சொல்லுவதற்குக் காரணம், இங்கேதான் அந்த மய்யப்புள்ளி இருக்கிறது. அதனால் தான் பெரியார் சொன்னார்.

நான் ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நான் ஜாதியை ஒழிக்க விரும்புகிற இந்தப் போரில் உன்னுடைய கடவுளை, மதத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்று சொன்னால், காப்பாற்றிக் கொண்டு போ.

நம்மால முடியலைங்கறது தானே பிரச்சனை. ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று முயற்சி செய்கிற போது அந்த ஜாதி எங்கே இருக்கிறது என்றால் வர்ணாஸ்ரமத்திலே இருக்கிறது. வர்ணாஸ்ரமம் எங்கே இருக்கிறது என்று சொன்னால், வர்ணாஸ்ரமத்தைப் படைத்தது நானே என்று கண்ணன் சொல்கிறான். ஆக, Philosophy of Hinduism - இந்துயிசத்தின் தத்துவம் என்று வருகிறபோது, அம்பேத்கர் தனியாகவே இதற்கென்று ஒரு சேப்டரே எழுதுகின்றார். Philosophy of Hinduism என்று வருகிற போது தந்தை பெரியார் சொன்ன அந்தத் தத்துவத் தளத்திலேதான் அம்பேத்கர் நிற்கிறார். அம்பேத்கர் செய்த ஆய்விலேதான் தந்தை பெரியார் நிற்கிறார். இது இவர்களுக்கிடையிலே இருக்கிற ஒர்மை. சரி இந்துத்துவா என்னும் கொள்கை சொல்கிறோமே, இதனுடைய அடிப்படைக் கூறுகள் என்ன? முதல்கூறு,



சமூகத்தை ஏற்றத்தாழ்வுள்ள படைப்புகளாக மாற்றுவது. Gradual graded inequality – the first character of the Hinduism, இந்துயிசத்தினுடைய தத்துவம் என்று அவர் நான்கு கூறுகளைச் சொல்லுகிறார். Graded inequality வேற்றுமையைக் கூட ரொம்ப புத்திசாலித்தனமாக படிப்படியாக வைப்பது. Horizontal division வேறு Vertical division வேறு அம்பேத்கர் மிகத் தெளிவாகச் சொல்லு கிறார்.

Horizontal division என்று சொன்னால், கிடைநிலையில் பாகுபடுத்திக்கொண்டே போவது இதிலே ஒரு கட்டையை எடுத்துவிட்டு இன்னொரு கட்டைக்குத் தாவலாம். ஆனால் ஏணிப்படியைப் போல Vertical ஆக வைத்தால் ஒரு படியை விட்டு இன்னொரு படிக்குப் போக முடியாது. இந்தியாவில் ஜாதி எப்படி இருக்கிறது என்றால் படிக்கட்டைப் போல இருக்கிறது. Vertical division - Vertical ஆக இருக்கிற காரணத் தினாலேதான் ஒரு ஜாதியிலிருந்து இன்னொரு ஜாதியை தாண்டமுடியாமல் போகிறது என்கிற ஆய்வினை அம்பேத்கர் வைக்கிறார். அதைத் தந்தை பெரியாரும் ஒப்புக்கொண்டு, ஜாதியை நாம் எடுக்க வேண்டுமென்று சொன் னால் மதத்தை ஒழித்தாக வேண்டும். மதத்தை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால் மதத்தைக் காப்பாற்றுகின்ற கடவுளை ஒழித்தாக வேண்டும் என்றார். இந்த இடத்திலே நான் ஒன்றைச் சொல்ல வேண்டும். அம்பேத்கர் தன்னை ஒரு ஆன்மீகவாதி என்று அடையாளப்படுத்திக் கொண்டவர். அதனால் தான் பெரியாரை நான் கவனமாகச் சொன்னேன், பெரியாரை நாம் நாத்திகனாகப் பார்ப்பது என்பது வேறு, அந்த நாத்திகத்துக்குள் அவர் சொல்லுவது நான் ஒரு தாராளவாதி என்று அவர் சொல்லுவதற்குக் காரணம், கடவுளை நேரடியாக வெறுக்க வேண்டிய அவசியம், எதிர்க்க வேண்டிய அவசியம் பெரியாருக்கு வந்ததற்குக் காரணம் வேறு. பகுத்தறிவு என்பது வேறு. ஆனால் பெரியாருடைய நாத்திகத்திற்குப் பின்னால் இருக்கிற சமூகம் சார்ந்த உணர்வும், அம்பேத்கர் உயர்த்திப்பிடித்த ஆன்மீகமும் ஒரு இடத்தில் சந்திக்கிறது. ஜாதி கூடாது, இறப்புக்குப் பிறகு ஒன்றும் கிடையாது. புத்தரிடத்திலே கேட்டார்கள், இறப்புக்கு, சாவிற்குப் பிறகு மனிதன் எங்கே போகிறான் என்று கேட்டதற்கு அவர் சொன்னார்:

“ஒரு விளக்கு அணைந்ததற்குப் பிறகு அந்த ஒளி எங்கே போகிறது என்று கேட்டால் நான் என்ன சொல்லுவேன்”.

ரொம்ப எளிமையாகச் சொன்னார். ஒரு காலகட்டத்தில் அவர் இன்னும் தெளிவாகச் சொல்லுகிறார். அவர் எழுதிய இரண்டு புத்தகங் களைக் கல்லூரி மாணவர்கள், வரலாற்று மாணவர்கள் படித்தாக வேண்டும். Who were the sudras? Why they have been called as sudras and termed as fourth varna in Indo-aryan society சூத்திரர்கள் யார்? அவர்கள் ஏன் நான்காவது வர்ணமாக ஆக்கப்பட்டார்கள்? என்று ஒரு புத்தகம்.

ஆய்வுக்கட்டுரை. இன்னொரு புத்தகம். Who were the untouchables? Why they have been called as untouchables? அவர்கள் ஏன் தீண்டத்தகாதவர்களாக அழைக்கப்பட்டார்கள்? என்று சொன்னபோது சொல்கிறார், இந்தத் தீண்டாமை ஜாதி எல்லாம் எப்போது வருகிறது என்று சொன்னால், கிறிஸ்து பிறந்ததற்குப் பின்பு 400 ஆண்டுகளில் அதற்கு முன்பு கிடையாது. பாகியான் வருகிற பொழுது அதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார். கி.மு.400 வது ஆண்டு பௌத்தத்திற்கும் ஏற்கனவே இருந்த ஆரிய சமூகத்திற்கும் நடந்த மோதலின் வெளிப்பாடுதான் இந்த ஜாதிகளெல்லாம் வருகிறதென்று அங்கே அவர் குறிப்பிட்டு ஒரு ஆய்வுக்கட்டுரை வைக் கிறார். அந்த ஆய்வை மறுதலிக்கிறவர்களும் இருக்கிறார்கள், ஏற்றுக் கொண்டவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால், எங்கே நாம் நிற்கிறோம் என்று சொன்னால் , இந்த நான்கு குணங்கள் இருக்கிறதே, Graded inequality-number one வேறுபாடுகளை ஏற்படுத்தி அந்த வேறுபாடுகளைக் கட்டாயமாக ஆக்குவது. இன்னொன்று, அப்படி வேறுபாடுகளை ஏற்படுத்தியதற்குப் பின்னால் பெரும்பான்மை சமூகத்திற்குக் கல்வியை மறுப்பது. இது ஒரு குணாம்சம். இந்துத்துவா வினுடைய குணாம்சத்தில் இதுவும் ஒன்று. மூன்றாவது, Prohibition of power அவன் அதிகாரத்திற்கு வந்துவிடக்கூடாது என்று கவனமாக இருப்பது. 1930இல், 40 இல் எல்லாம் என்ன பண்ண முடியும்? உங்க ளுக்குத் தெரியாது. பல மாணவர்களுக்குத் தெரியாது. இன்றைக்கு இருக்கிற அரசியலில் மாணவர்கள் எங்கெங்கோ போய்க்கொண்டிருக்கிறார்கள். திருவிழாவிலே குழந்தைகளை ஒரு நிமிடம் இடுப்பிலேயிருந்து தாய் மார்கள் கழட்டிவிட்டால் கிலுகிலுப்பைக்காரன் பக்கத்திலே ஓடிப்போகிற குழந்தையைப் போல் இன்றைக்கு இருக்கிற இளைஞர்கள் எங்கெங்கோ அரசியல் கட்சிக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன் 1931 வரை இந்த மண்ணில் சமஸ்கிருதம் படித்தால் மட்டும்தான் எம்.பி.பி.எஸ் - இல் அட்மிஷன். பார்ப்பதற்குப் பைத்தியக்காரத்தனமாக இருக்கும். அண்ணா எழுதுகிறார்.

அண்ணா நேரடியாகச் சொன்னால் எடுக்காது என்று சொல்லி வேறுவிதமாக எழுதுகிறார்: ரோமனசோ என்று ஒருவன் இருந்தான் ரஷ்யாவில், அவனுக்குத் தாய்மொழி இலத்தீன். ஆனால் இலத்தீன் படித்த அவனுக்கு மருத்துவக்கல்லூரியில் இடம் மறுக்கப்பட்டது. அதனால் அவன் இலக்கியத்திலே பின்னால் பெரிய ஆளாகி பெரிய நோபல் பரிசு பெற்றான். ஆனால் அவன் அப்போது வருந்தினான், எனக்கு இரஷ்ய மொழி தெரியவில்லை என்பதற்காக எம்.பி.பி.எஸ் சீட் கொடுக்கவில்லையே என்று. உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும், ஒரு மொழி தெரியவில்லையே என்பதற்காக அந்த மண்ணிலே வாழுகிறவனுக்கு எம்.பி.பி.எஸ்ஸிலே சீட் இல்லையா என்று கேட்கிறாய் தம்பி, இங்கு மட்டும் என்ன வாழ்ந்தது? 1931



வரை எந்த ஜாதிக்காரனாக இருந்தாலும் சமஸ்கிருதம் தெரிந்தவனுக்கு மட்டும்தான் எம்.பி.பி.எஸ்ஸில் இடம் என்கின்ற சட்டத்தை உருவாக்கிய நாடு இந்த நாடு. எத்தனை மாணவர்களுக்குத் தெரியும்?

ஆக இது தெரியாமல் போன காரணத்தினால்தான் இன்றைக்கு நிழலிலே இருக்கின்றோம் என்கிற காரணத்தினால்தான் வெயிலின் வெப்பம் அறியாமல் நாம் இருக்க உழைத்த தலைவர்களையெல்லாம் மறந்துபோகின்ற அவலத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம். ஆகவே இது மூன்றாவது இடம். Prohibition of power - அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். மூன்று Ban on property - சொத்து வாங்கக்கூடாது என்பது இந்துயிசத்தினுடைய தத்துவம். நான்கு, பெண்களை சிறுமைப் படுத்துவது, பெண்களை அடக்கி வைப்பது. Suppression of women - மிகப்பெரிய குற்றச்சாட்டு ஒன்று இருக்கிறது. அம்பேத்கர் மீது. பெரியார் பேசிய அளவிற்கு, பெரியார் போராடிய அளவிற்கு அம்பேத்கரை ஒரு பெண்ணுரிமைப் போராளியாக அடையாளப்படுத்த முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அம்பேத்கர் அதற்காகத் தனியாகக் குரல் கொடுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அவருடைய குரல் வேறு விதமாக இருக்கிறது.

Rise and fall of Hindu women என்று ஒரு சிறு நூலை எழுதியிருக்கிறார். பெரியார் பெண் விடுதலையை பகுத்தறிவிலிருந்து பகுத்தறிவுத் தளத்திலேயிருந்து பார்த்தார். பெரியார் ஜாதி ஒழிப்பைப் பகுத்தறிவுத் தளத்திலேயிருந்து பார்த்தார். அம்பேத்கர் ஜாதி ஒழிய வேண்டுமென்று விரும்பினார், பெரியாரைப் போலவே ஆய்வு செய்தார், எழுதினார், எல்லாம் உண்மைதான். ஆனால், விடுதலையை ஒரு ஆன்மீகத் தளத்திலிருந்து பார்க்க விரும்பினார். பவுத்தத்திற்குப் போனார். பவுத்தத்தில் பெண்களுக்கு எல்லா உரிமையும் இருந்தது. அதைவிட அம்பேத்கரை நாம் அறிந்துகொள்ளவேண்டிய ஒரு இடம். நான் அதற்குப் பின்னால் வருகிறேன். எந்த இடத்திலே பெரியார் செய்த காரியத்தை, பிரச்சாரம் செய்த காரியத்தை அம்பேத்கர் மிகச் சாதுர்யமாக அரசியல் சட்டத்திலே கொண்டு வர முயற்சி செய்தார் என்பதை நான் அடுத்த ஓரிரு நிமிடங்களில் சொல்ல இருக்கிறேன். இந்த இடத்திலே வருகிற பொழுது Suppression of women, ஆக Graded inequality, Prohibition of education, Prohibition of power, Ban on property, Suppression of women- இதுதான். இந்த இந்துயிசம் இந்த ஐந்து கோட்பாடுகளை வைத்திருக்கிறதே இதனுடைய விளைவு இந்த சமூகத்தில் மட்டும்தானா? அரசியலில் கிடையாதா என்றால் அரசியலில் இந்த சமூகத் தினுடைய அமைப்பினைச் சார்ந்த சாரம் எல்லா இடங்களிலேயும் ஒரு மிகப்பெரிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. பெருஞ்சித்திரனார் ரொம்ப அழகாகச் சொல்லுவார்- இந்த நாட்டினுடைய விடுதலையை நான் குறைவுபடுத்தவில்லை, நான் இந்திய அரசாங்கத்தினுடைய அமைச்சர்,

என்னுடைய காரில் தேசியக்கொடி பறந்துகொண்டிருக்கிறது. எனக்கு தேசப்பற்று இருந்தாக வேண்டும். ஆனால் வரலாற்றைச் சொல்லுகிற பொழுது சரியாகச் சொல்லவேண்டும் பெருஞ்சித்திரனார் சொல்லுகிறார்:

நல்லவேளை வெள்ளைக்காரன் வந்தான், நம்மையெல்லாம் காப்பாற்றினான், அவன் மட்டும் வராமல் போயிருந்தால் நாமெல்லாம் நரியாக, பூனையாக ஊளையிட்டுக்கொண்டிருந்திருப்போம். இதை நாம் மறுப்பதற்கில்லை. அதனால்தான் பெரியார் மீதும் அம்பேத்கர் மீதும் ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டு இவர்கள் வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடித்தார்கள். சுதந்திரம் வேண்டாம் என்று பெரியார் சொன்னார். அம்பேத்கர் இன்னும் வேகமாக ஒரு இடத்திலே சொன்னார். பெரியாருக்கும் அம்பேத் கருக்கும் இருக்கிற ஒற்றுமையைப் பார்க்க வேண்டும். பெரியார் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகிற போது,

வெள்ளைக்காரர்கள் கொள்ளைக்கார பிராமணர்களுக்கு எழுதிக் கொடுத்த மேட் ஓவர். -இந்த வார்த்தையை அய்யா அப்படியே சொல்லி யிருக்கிறார்.

சுதந்திரம் என்பது வெள்ளைக்காரர்கள் பிராமண கொள்ளைக்காரர் களுக்கு எழுதிக் கொடுத்த மேட் ஓவர். நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார். இதைச் சொல்லுகிற போது 1947. ஆனால் இது 1937 , 39 லேயே அம்பேத்கருக்கு ஒரு சங்கடம் வருகிறது. இரண்டாம் உலகப்போர் வந்த போது அந்த இரண்டாம் உலகப்போரில் வின்செண்ட் சர்ச்சில் இங்கிலாந் தினுடைய பிரதமர். நம்முடைய நாடு அவருக்குக் கீழே இருக்கிறது. அவர் ஹிட்லரை எதிர்க்கவேண்டுமென்பதற்காக இந்தியத் துருப்புகளைப் பயன்படுத்துகிறார். யாருக்கு எதிராக? நாஜிப்படைகளுக்கு எதிராக. ஹிட்லருக்கு எதிராக இந்தியாவினுடைய துருப்புகளை அவர் பயன் படுத்துகிற பொழுது, காந்தி ஒரு கேள்வியை வைக்கிறார் காங்கிரஸ் சார்பில். என்ன கேள்வி என்றால் ''வின்சென்ட் சர்ச்சில் அவர்களே, உங்களுக்கு எதிரி ஹிட்லர், எங்களுக்கு அல்ல. இந்தப் போரில் எங்களுடைய சிப்பாய்களை, எங்களுடைய துருப்புக்களை, எங்களுடைய ஆயுதங்களை நீங்கள் பயன்படுத்தப்போகிறீர்கள். இந்த வெற்றிக்குப் பின்னால் எங்களுக்குக் கிடைக்கப் போவது என்ன?'' என்று கேட்கிறார். What will be the benefit after the war, having deployed our sources? இது காந்தி வைக்கிற கேள்வி, வின்செண்ட் சர்ச்சிலுக்கு. வின்செண்ட் சர்ச்சில் ரொம்ப அமைதியாக பதில் சொன்னார்: To restore traditional Britain என்னுடைய மரபுமிக்க தொன்மைமிக்க பெருமை மிக்க பிரிட்டனை நான் மீண்டும் பெறுவதற்காகத் தான் போராடப் போகிறேன்.



எவ்வளவு பெரிய கொழுப்பு? காந்தியாருக்குக் கோபம். என்னு டைய சகோதரன் இரத்தம் இழக்கிறான். என்னுடைய சகோதரன் வாழ்வை இழக்கப்போகிறான். குற்றுயிரும், குலைஉயிருமாக இளம் மனைவிகளை இழக்கப்போகிற கணவனை என் கண்ணெதிரிலே பார்க்கிறேன். ஆனால் நீ சொல்லுகிறாய், To restore traditional Britain உன்னுடைய சிப்பாய்களை நான் கொல்லப்போகிறேன் என்று சொன்னால் இது உனக்குத் திமிரல்லவா என்று கேட்கிறார். இது யங் இண்டியாவில் வருகிறது.

அடுத்தநாள் அம்பேத்கர் கேட்கிறார். Yes, the question that was asked by Mr.Gandhi is legitimate. காந்தி கேட்கிற கேள்வி ரொம்ப நியாய மான கேள்வி. ஆனால் திரும்ப நான் கேட்கிறேன் காந்தியை. வின்செண்ட் சர்ச்சிலுக்கு சிப்பாயை அனுப்பிவிட்டு என்ன பயன் என்று கேட்கிறாயே? நான் கேட்கிறேன், இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டுமென்று நீ கேட்கி றாயே, அந்த சுதந்திரத்திற்குப்பின்னால் எனக்கும் பிற்படுத்தப்பட்ட வனுக்கும் பற, பள்ளனுக்கும் என்ன கிடைக்கப்போகிறது? What will be the social order after independence since you are fighting for independence? இந்தக்கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு நீ அவனுக்குக் கேள் என்று அம்பேத் கர் கேட்டபோதுதான் காந்தி தடுமாறிப் போனார். இது வரலாறு. இதைத் தான் தந்தை பெரியார் வெள்ளைக்காரர்கள் பிராமண கொள்ளைக்காரர்களுக்கு எழுதிக்கொடுத்த மேட் ஓவர் என்று சுதந்திரத்தைச் சொல்கிறார்.

ஆக, இந்துயிசம் என்பதும், இந்துயிசத்தினுடைய தத்துவம் என்பதும் இந்தியாவினுடைய இறையாண்மைக்கு ஊறு விளைவித்தது. இந்தியா வினுடைய சுதந்திரத்திற்குத் தடங்கலை ஏற்படுத்தியது. இதிலே பெரியாரை யும், அம்பேத்கரையும் தனிப்பட்ட முறையில் குறை சொல்லிப் பிரயோஜனம் கிடையாது. பேச வேண்டிய அளவுக்கு இந்துயிசம் உருவாக்கியது. இன் னொன்றையும் நான் சொல்ல வேண்டும். அய்யா பெரியார் சொல்லி யிருக்கார். கடைசியா 1973 லே அவர் பேசும் போது சொல்லுகிறார், இந்த பிராமணியம்தான், இந்த இந்துமதத் தத்துவம்தான் இந்தியாவைப் பங்கு போட்டது, மக்களைப் பங்குபோட்டது, பிளவு படுத்தியது.

உண்மை பல பேருக்குத் தெரியாது. 1940 வரைக்கும் ஜின்னா பாகிஸ்தான் கேட்கவில்லை. காங்கிரசுல என்னைக்கு 1905 லே ஒரு முதல் மாநாடு பாலகங்காதர திலகர் தலைமையிலே நடந்த பொழுது அவர்தான் மூஞ்செலி பிரச்சனையைக் கொண்டு வருகிறார். பிளேக் நோயால் பாதிக்கப்பட்டபோது வெள்ளைக்காரர்கள் எலியைக் கொல்லுகிறார்கள். எலியைக் கொல்லுகிற பொழுது பாலகங்காதர திலகர், இது விநாயக னுடைய வாகனம். இதைக் கொல்லாதேன்னு சொல்றார். ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்ப சேது சமுத்திரத் திட்டம் ஏன் நிக்குது?

நான் அடிக்கடி சொல்லுவேன், ஒரு பெரிய நிகழ்ச்சியில் சென்னை யில் சொன்னேன். என்னுடைய வீட்டில் என்னுடைய தாய் தந்தையர் என்னுடைய தாத்தா இன்னமும் சிவன் படத்தை மாட்டி வச்சிருக்காங்க. சிவன் தலையில நிலா இருக்கு. நானும் நம்பினேன். சிவனுடைய தலையில்தான் நிலா இருக்கிறதென்று . நம்புவதில் தவறில்லை. நான் அதன் குறுக்கே வரவில்லை. இறை நம்பிக்கை தவறென்று சொல்லுகிறவனல்ல. நான் எப்போதும் திரும்பத்திரும்பச் சொல்லுவேன்.

உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன் கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனியமையும் குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா நின் குறைகளற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே. என்று பாடினால் பாடிவிட்டுப் போ, உனக்கு எதாவது வந்தால் போதும். ஆனால் அது எனக்கு உடன்பாடல்ல. ஊர் வேணாம், உற்றார் வேணாம், அண்ணன் தம்பி வேணாம், நீ மட்டும் இருந்தால் போதும்னா, அப்பறம் ஏன் நீ சமூகத்தில வாழ்றே? அதுதான் எனக்குக் கேள்வி. தெய்வ நம்பிக்கை இருந்துவிட்டுப் போகட்டும். எனக்குப் பிரச்சனை இல்லாது இருக்கிற வரை. அதே போல நீ அரங்கப் பெருமாளைப் பாடு. எதை வேண்டுமானாலும் பாடு. ஆனால் கடவுள் என்னுடைய உரிமைக்குக் குறுக்கே வருகிறபோதுதான் எங்களுக்குப் பிரச்சனை.

ஆக, சிவன் தலையிலே நிலா இருக்கிறது என்பது நம்பிக்கை. நானும் நம்பினேன் ஒருகாலத்தில், என்னுடைய தந்தை நம்பினார், என்னுடைய தாத்தன் நம்பினார், என்னுடைய பாட்டன், பூட்டன் எல்லோரும் நம்பினார்கள். ஆனால் குறைந்தபட்சம் 1969 இல் ஆம்ஸ்ட் ராங் போய் நிலாவில் காலடி வைத்ததற்குப் பிறகு என்ன கதி? ஒரு வகுப்பிலே மாணவன் இருக்கிறான், தமிழாசிரியர் வருகிறார் முதல் வகுப்பில், பித்தா பிறை சூடி பெருமானே ன்னாரு. பெரியபுராணப் பாட்டு. தமிழாசிரியர் இருந்தா தெரியும். பித்தா பிறைசூடிப் பெருமானேன்னா, நிலாவைத் தலையில் வைத்திருக்கிற பெருமானே வணக்கம்ங்கறாரு. முடிச்சர்றாரு. ரொம்ப நல்லா கேட்டுக்கிட்டு இருந்தான் பையன். மணியடித்தது. அறிவியல் ஆசிரியர் வந்தார். 1969 ஆம் ஆண்டு ஆம்ஸ்ட்ராங் நிலாவில் கால் வைத்தார்னாரு. இந்த புத்திசாலி மாணவன் கேட்டான், சிவன் தலையிலயா அவரு கால் வச்சாருன்னு கேட்டான். ஆக, சிவனுடைய தலையிலே நிலா இருக்கிறது என்பது நம்பிக்கை. ஆனால் ஆம்ஸ்ட்ராங் கால்வைத்துவிட்டான் என்பது அறிவியல். அறிவியல் வருகிற போது நம்பிக்கை நகர்ந்து வழிவிட வேண்டும். நகர்ந்து வழி விடாத காரணத்தினால் சேது சமுத்திரம் நிற்கிறது. நம்பிக்கையா? அறிவியலா?

இந்த நம்பிக்கையைச் சொல்லுகிறபோது, ஒருகாலகட்டத்தில் இந்தியாவைத் துண்டாடுவதற்குக் காரணமாக இருந்தது இந்த இந்துமத



நம்பிக்கைதான். 1946 இல் கிளமெண்ட் அட்லிங்கறவர் இங்கிலாந்துக்குப் பிரதமர். கிளமெண்ட் அட்லி என்ன பண்றார், இந்தியாவுக்குச் சுதந்திரம் எப்படித் தரவேண்டும் என்பதற்காக மூன்று பேரைக் கூப்பிடுறார். காங்கிரசுல இருந்து ஒருத்தர், முஸ்லீம் லீக்ல இருந்து ஒருத்தர், Princely States-சமஸ்தானங்களுக்கு ஒரு ரெப்ரசன்டேட்டிவ். இந்த மூணு பேர்தான் இந்தியாவுக்கு ரெப்ரசன்டேட்டிவ். இந்துக்கள ரெப்சன்ட் பண்ண ஒண்ணு, முஸ்லீம்கள ரெப்ரசன்ட் பண்ண ஒண்ணு, Princely States சமஸ்தானங் களுக்கு ஒண்ணு. 1946 இல் இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த பிரிட்டிஷ் பிரதமர் கிளமெண்ட் அட்லி கூட்டின கூட்டத்துக்கு மூணு பேர் போனார்கள். காங்கிரஸ் சார்பில் போனவர் அப்துல் கலாம் ஆசாத், முஸ்லீம். முஸ்லீம் லீக் சார்பாகப் போனவர் ஜின்னா, அவர் ஒரு முஸ்லீம். சமஸ்தானங்களின் சார்பாகப் போனவர் நவாப் ஆஃப் பீகார். இந்தியாவுக்குச் சுதந்திரம் வேணும்னு போனது மூணு முஸ்லீம். இந்துக்கள் அல்ல. ஆனாலும் இந்த நாடு பிரிவினைக்கு காரணம், ஜின்னாகிட்ட கேட்டாங்க, ஏம்ப்பா நாடு கேக்குறேன்னு கேட்டாங்க.

அவர் ஜீலியஸ் சீசர் நாடகம் தெரியுமான்னு கேட்டார். காந்திய நம்புங்கன்னு சொன்னப்ப அவர் சொன்னார், காந்தியை நான் நம்புகிறேன், ஆனால் காந்தியினுடைய இராமராஜ்யத்தை என்னால் நம்ப முடியாது. அவர் சொன்னார், புருட்டஸ் சொல்லுவான் அந்த நாடகத்துல. Not that I love Ceaser less, but I love my country more. ஜீலியஸ் சீசரை கடைசியா புருட்டஸ் குத்துறான். புரூட்டஸ் குத்துனதுக்குப்பிறகு சீசர் கேப்பான், “அய்யோ நண்பா நீயுமா குத்துனன்னு” கேப்பான். புருட்டஸ் சொல்றான், “நண்பா உன்னை நான் நேசித்தது உண்மைதான், என்ன செய்வது உன்னைக் காட்டிலும் இந்த நாட்டைக் கூடுதலாக நேசித்து விட்டேன்”.

அது மாதிரி ஜின்னா சொன்னார், Not that I love Ceaser less, but I love my country more. - காந்தியை எனக்குத் தெரியும், நேசிக்கிறேன். ஆனால் காந்தி வைத்திருக்கிறாரே இராமராஜ்ஜியம் , அது ஜாதிய இராஜ்ஜியம், இந்த நாடு உருப்படாது அதனால என்ன வெளிய விடுன்னாரு.

ஆக இந்த நாட்டைத் துண்டாடியது இந்துத்துவா, மறந்துவிடாதீர்கள். ஆக, நாட்டினுடைய அரசியலிலிருந்து, சமூகத்திலிருந்து வருகிற வழி யெங்கும் இந்த மண்ணிலே எல்லாவற்றிற்கும் நீங்கள் அரசியலைப்பார்த் தால், வெள்ளைக்காரர்கள் Untouchability Abolition Act, 1857 லிலேயே கொண்டு வந்தாங்க. அதுக்கு நேரடியா சொல்லல. Removal of disablties act என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த மண்ணில் நரபலியை ஒழித்தது வெள்ளைக்காரர்கள். உடன்கட்டை ஏறுவதை ஒழித்தது வெள்ளைக் காரர்கள். கைம்பெண் மணத்தை, கைம்பெண் மறுமணத்தை கூடாது என்பதைத் தடைசெய்தவர்கள் வெள்ளைக்காரர்கள். இப்படி எத்தனையோ

சமூகக்கொடுமைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் வெள்ளைக்காரர்கள் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் இந்த சட்டத்தை கொண்டுவருகிற போதெல்லாம், எதிர்ப்புத்தெரிவித்த இயக்கமாகவும், எதிர்ப்பு தெரிவித்த தலைவர்களாகவும் காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸினுடைய தலைவர்களும் இருந்தார்கள் என்பதுதான் மறுக்கமுடியாத உண்மை.

எனவே அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த இரண்டு வெவ்வேறு தலைவர்களையும் நாம் வெவ்வேறு தளங்களிலே பார்க்கிற பொழுது ஓர் ஒற்றுமை தெரிகிறது. பெரியார் இந்தியாவினுடைய சுதந்திரம் வேணான்னு சொன்னதற்கும், வின்செண்ட் சர்ச்சில் கிட்ட காந்தி பேசினபோது அம்பேத்கர் அது வேணான்னு சொல்றதுக்கும் என்ன காரணம்? இந்த சமூக அமைப்பு, இந்த சமூக அமைப்பை இந்துத்துவா சமூகம் எப்படி மாற்றியிருக்கிறது என்பதனால் தான். இதைவிட இன்னொன்று 1916 லேயே பெரியாருக்கு முன்பாகவே, இங்கே அவர் பேசினாரே கம்யூனிஸ்ட்கட்சியினுடைய அறிக்கை. ஒவ்வொரு தலைவர்களுக்கும் ஒரு அடையாளம் இருக்கிறது. மார்ட்டின் லூதர்கிங் என்று சொன்னால் March to Washington என்று சொல்வார்கள். ஒரு அடையாளம். மார்டின் லூதர் கிங் கடைசியா சொன்னது அதான். மார்ச் டு வாசிங்டன் . அங்கே நான் உங்களுக்கு விடுதலை வாங்கித்தருகிறேன். ஆக, மார்டின் லூதர் கிங்னா மார்ச் டு வாசிங்டன். கம்யூனிஸ்ட் இயக்கத் தினுடைய தலைவர்கள் என்று சொன்னால் 1848 லே Manifesto of Communist Party. அதே மாதிரி இந்த Non-brahmin movement அல்லது இந்துத்துவத்திற்கு எதிரான சங்கதிகள் என்று வருகிற போது 1916 லேயே பிராமணரல்லாதார் அறிக்கையிலே மிகத் தெளிவாக இருக்கிறது:

"நாங்கள் வெள்ளைக்காரர்களுக்கு விசுவாசிகள். அவர்களால் தான் எங்களுக்கு ஓரளவாவது கல்வியும், சுகாதாரமும், மனித உரிமையும் இங்கே தரப்படுகிறது" என்பதை 1916 லேயே நம்முடைய அறிக்கை மிகத் தெளிவாகச் சொன்னது. ஆக, இந்திய நாட்டினுடைய பிரிவினைக்குக் காரணம் இதுதான். இந்தியாவினுடைய சாதி ஏற்றத் தாழ்வுக்கு இதுதான் காரணம். இப்படிப்பட்ட மோதல்கள் உள்ள ஒரு இடத்தில், இப்படிப்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகள் இருக்கிற ஓர் இடத்தில் தீர்வாக தந்தை பெரியாரும் அம்பேத்கரும் எதை முன்வைக்கிறார்கள் என்றால், நான் முன்னமே சொன்னதைப் போல இது ஒழிய வேண்டுமென்று சொன்னால், இந்த நிறுவனம் இன்ஸ்டிடியுஷன் இந்துமதம் என்கின்ற நிறுவனம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான், இந்து மதம் ஒரு நிறுவனம். கண்ணுக்குத் தெரியல அவ்வளவுதான். பாரதிதாசன் யுனிவர்சிட்டி ஒரு நிறுவனம் கண்ணுக்குத் தெரியுது. ஆனால், ஒரு கிராமத்திற்குப் போய் ஆதிதிராவிடர் தெருவில் இருக்கிறவன் ஒரு வன்னியத்தெருவில், அல்லது வன்னியர் தெருவில் இருக்கிறவன் ஒரு ரெட்டியார் தெருவில் இன்றைக்கும் வீட்டிற்குப்



போகமுடியாது. குடியிருக்க முடியாது. அல்லது இன்றைக்கும் வீடு வாடகைக்குப் போக முடியாது, சொந்தமாக இடம் வாங்க முடியாது என்று சொன்னால் கண்ணுக்குத் தெரியாத ஒரு நிறுவனம் இருக்கிறது. எக்கனாமிக் புரபசர், ஹிஸ்ட்ரி புரபசரா மாற முடியாது. இது இன்ஸ்டிடியுஷன். தெரியுது. உங்களுக்கு எக்கனாமிக் புரபசருக்குப் பதிலா ஹிஸ்ட்ரி புரபசர் வந்தா நீ ஏன் வந்த? இன்னக்கி ஹிஸ்ட்ரி வகுப்பு இல்லையேன்னு சொல்றிங்க. It is institution, ஆனா அங்க கண்ணுக்குத் தெரியாத ஒரு நிறுவனம் இருக்கிற காரணத்தினாலேதான் அந்த நிறுவனத்தைத் தகர்க்க வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதனால் தான் தந்தை பெரியார் அவர்கள், அவர்மீது தேசத்துரோகி எனப் பட்டம் சூட்டப்பட்ட போது, மிகத் தெளிவான ஒரு விளக்கத்தைத் தந்தார்.

நான் தேசத்துரோகிதான், இந்த மண்ணில் பார்ப்பன ஜாதி, பற பள்ளு ஜாதி, சூத்திர ஜாதி என்கின்ற ஜாதிகளை ஒழித்துவிட்டு ஒரே ஜாதியாக ஆக்குகிற தொண்டினை மேற்போட்டுக்கொண்டு வாழுகிறவன். இப்படிச் செய்வது தான் தேசத்துரோகம் என்றால் நான் கடைசி வரை தேசத்துரோகி யாகத்தான் இருக்க விரும்புகிறேன்.

என்று இந்த மண்ணிலே பதிவு செய்தவர் அவர்தான். இப்ப இன்னக்கி ஒரு குற்றச்சாட்டை வைக்கிறார்கள், என்ன குற்றச்சாட்டு இதோட நான் முடிக்கணும். இந்த ஒரு குற்றச்சாட்டோடு நான் முடிக்கணும், ரொம்ப நேரம் பேசிட்டேன்னு நினைக்கிறேன். பெரியார் பேருல என்ன குற்றச்சாட்டை வைக்கிறான்? இவர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதையும் செய்யவில்லைன்னு வைக்கிறான். அம்பேத்கார் பேருல என்ன வைக்கிறான்? இவர் தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தலைவர், பிற்படுத்தப்பட்டவர் களுக்கு ஒண்ணும் செய்ய லங்கறான். இது இரண்டுக்கும் பதில் சொல்லிட்டு என்னுடைய உரையை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

தந்தை பெரியார் மிகத் தெளிவாகச் சொன்னார் பறையன் பட்டம் போகாமல் சூத்திரப்பட்டம் போகாது .

ஜாதி என்பது தனி ஒரு வன்னியர் அல்ல, பறையர் அல்ல, ரெட்டி யார் அல்ல, செட்டியார் அல்ல, It is institution இந்த இன்ஸ்டிடியுஷனை முழுமையா அழிக்காம ஜாதி போகாது, ஒன்று. இதை எங்கே அவர் வெளிப்படுத்துகிறார் என்றால் எவ்வளவு தூரம் தாழ்த்தப்பட்டவர்களது விடுதலையிலே அக்கறை கொண்டிருக்கிறார் என்று வரலாறு சொல்லுகிற தென்றால், அவர் பேசியதை எல்லாம் எப்படி வேண்டுமானாலும் திரித்துப் பேசலாம். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று ஒரு உச்ச இடம் இருக்கின்றது. வரலாற்றுப் பதிவிலே ஒரு உச்சமான இடம் இருக்கின்றது. அதில் அம்பேத்கர் தோற்றுப் போய்விடுகின்றார். அந்தத் தோல்வியை அவர்

வேறு விதமாக ஒப்புக்கொள்கிறார். பூனா ஒப்பந்தம். அந்த பூனா ஒப்பந்தத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள்? பலபேருக்குத் தெரியாது பூனா ஒப்பந்தம்னா என்னன்னு.

இன்றைக்குப் பெரம்பலூர் reserve constituency, நான் ரிசர்வ் தொகுதியில போட்டி போடறேன். ஆனா ரிசர்வ் தொகுதியில இரட்டை வாக்குமுறை இருந்தால் ஒரு தாழ்த்தப்பட்டவரும் போகலாம், ஒரு பிற்படுத்தப்பட்டவரும் அல்லது பொது ஜாதியினரும் போகலாம் , என்ன காரணம் என்றால், அம்பேத்கர் அப்பொழுதே சொன்னார். ஒரு தனித் தொகுதியில இருக்கிற ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபர் நாடாளுமன்ற உறுப்பினரோ, சட்டமன்ற உறுப்பினரோ முழுமையாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமே செயலாற்ற முடியும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவர் மற்றவரது வாக்கையும் பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். எனவே எங்களுக்கு இரட்டை வாக்குரிமை வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒருமுறை வேண்டுமென்று இரட்டை வாக்குரிமையைக் கேட்டார். கேட்டது அம்பேத்கர், கொடுத்தவர்கள் வெள்ளைக்காரர்கள். எப்பொழுதுமே பிற்படுத்தப்பட்ட வர்களது உரிமையில், தாழ்த்தப்பட்டவர்களது உரிமையில் அக்கறையையும் அனுதாபத்தையும் காட்டிய ஒரு சமூகம் உண்டென்று சொன்னால் அது வெள்ளைக்கார சமூகம் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். அது நாடு, போட்டி என்று வருகிற போது அடக்குமுறை என்பதெல்லாம் என்பது வேறு. அரசியல் என்பது வேறு ஆனால் சமூகக் கண்ணோட்டத்தில் இது உண்மை.

ஆக, இரட்டை வாக்குரிமையை பூனா ஒப்பந்தம் என்கின்ற அந்த ஒப்பந்தத்திற்கு முன்பு கொண்டுவந்தபோது காந்தி அதை எதிர்க்கிறார். என்ன சொல்லி எதிர்க்கிறார் என்றால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு விடுதலை வந்துவிடும் என்று சொல்லி எதிர்க்கவில்லை. அப்படிக்கூட நேரா வந்திருந்திருக்கலாம். ஆனால், காந்தி என்ன சொல்கிறார் என்றால், ''இது தாழ்த்தப்பட்டவர்களை இந்து மதத்திலிருந்து பிரிக்கின்ற ஒரு வேலையைச் செய்கிறது''. அவருக்கு இந்து மதத்து மேலே ரொம்ப அக்கறை. தன்னை சனாதனி என்று ஒப்புக்கொண்டவர், பகவத் கீதைதான் தன்னுடைய வழி காட்டி என்று சொன்னவர், எந்த பகவத் கீதை? உன்னுடைய அப்பா செஞ்ச தொழிலையே நீயும் செய்யணும்னு சொன்ன பகவத்கீதையே என்னுடைய வழிகாட்டி என்று சொன்னவர். அந்த காந்தி இந்த இரட்டை வாக்குரிமையை ஏற்றுக்கொள்ளமுடியாமல் உண்ணாவிரதம் இருக்கிறார். யார் பெற்ற மிகப்பெரிய இலட்சியம்? அம்பேத்கர் பெற்ற மிகப்பெரிய இலட்சிய உரிமையை எதிர்த்து, இரத்து செய்ய வேண்டுமென்று காந்தி போராடுகிறார், காந்தி உண்ணாவிரதம் இருக்கிறார், ஒருநாள், இரண்டுநாள், மூன்று நாள், நான்கு நாள் காந்தி குற்றுயிரும், குலை உயிருமாக இருக்கிறார்.



காந்தியினுடைய துணைவியார் அம்பேத்கரிடம் போய் என்னுடைய கணவரைக் காப்பாற்றுங்கள், எனக்கு மாங்கல்யப்பிச்சை அளியுங்கள் என்று சொல்லி அம்பேத்கருடைய வீட்டிற்கு காந்தி துணைவியார் செல்லுகிறார். நாடெங்கும் கொந்தளிப்பு. காங்கிரஸ் தலைவர்கள் கொதித்துப்போய் இருக்கிறார்கள். ஒரு அம்பேத்கர் இந்த தேசத்தினுடைய பிதாவை இந்த நாட்டை இப்படி உலுக்குகிறாரே என்று. எல்லாத் தலைவர்களும் சம்மதித்து விட்டார்கள். Succumb to precedent என்று சொல்வார்களே, காந்தியைக் காப்பாற்றினால் போதும் என்று ஒரு கட்டாயத்திற்கு எல்லாத் தலைவர் களும் வந்து விட்டார்கள். ஆனால் அம்பேத்கரே பயந்துபோய்விட்டார். அம்பேத்கரும் கிட்டத்தட்ட கையெழுத்துப் போட உள்ள சூழ்நிலை. ஒரே ஒரு ஜீவன்,

காந்தியினுடைய உயிர் பெரிதா? இந்த நாட்டில் இருக்கிற நான்கில் ஒருபங்கு உள்ள தாழ்த்தப்பட்டவர்களின் உரிமை பெரிதா என்றால் காந்தி சாவதானாலும் சாகட்டும், கையெழுத்துப்போடாதே என்று ஒரு தந்தி போனதென்றால், அது தந்தை பெரியாரிடமிருந்து போன தந்தி.

அம்பேத்கர் பயந்து கையெழுத்துப் போட்டுவிட்டார். ஆனால் சரித்திரம் சொல்லுகிறது. காந்தி உயிரா? தாழ்த்தப்பட்டவர்களின் மானமா, உரிமையா என்று கேட்டால், காந்தி போனால் எத்தனையோ காந்தி வருவார் கள், ஆனால் நீங்கள் கையெழுத்துப்போடாதீர்கள் என்று அம்பேத்கருக்குத் தந்தி கொடுத்த ஒரு மகத்தான தலைவன் தந்தை பெரியார். அவர்மீது இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரியைப் போல சித்தரிப்பு. விவாதம் நடக்கட்டும். காந்தி ஒரு பெரிய கடவுளல்ல. பெரியார் ஒரு கடவுளல்ல, பெரி யாரிடம் குறை காணலாம், குற்றம் காணலாம், தவறல்ல, ஆனால் ஆய்வு என்று வருகிற போது இதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அம்பேத்கர் மீது இன்னொரு குற்றச்சாட்டு. அவர் பிற்படுத்தப் பட்டவர்களுக்கு எதையுமே செய்யவில்லை என்று. தாழ்த்தப்பட்ட வர்களுக்கு இடஒதுக்கீடு பெற்றுக்கொண்டார் என்று அவர்மீது ஒரு குற்றச் சாட்டு. பார்ப்பதற்குத் தோற்றத்திற்கு உண்மையைப் போல் தோன்றும். உண்மைதான் ஏனென்றால், 1931 லதான் சாதி வாரிக் கணக்கெடுப்பு கடைசியாக முடியுது. அதுக்குப் பிறகு சாதி வாரிக் கணக்கெடுப்புக் கிடையாது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புதான் போய்க்கிட்டு இருக்கு. ஒவ்வொரு வீடா வர்றான். டோர் நம்பர் எழுதுறான். பேர் எழுதுறான் . என்ன ஜாதின்னு இப்ப கேக்கறது இல்ல. ஆனால் வெள்ளைக்காரர்கள் 1931 வரை 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜாதியையும் சேர்த்து, ஒவ்வொரு ஜாதியும் எவ்வளவுன்னு கணக்கெடுத்த வழக்கம் இருந்தது. அதைக் கடைசியா எம்.ஜி.ஆர் பண்ணிப்பார்த்தார். வன்னியர்களுக்கு இடஒதுக்கீடுன்னு வந்தப்ப ஜாதி வாரியாக் கணக்கெடுன்னு சொன்னார். எடுத்தாங்க. தமிழ்நாட்டோட

மக்கள் தொகை 4 கோடி. இவிங்க கொண்டுட்டு வந்த தொகை 12 கோடி. வன்னியர் 8 கோடின்ட்டான், ஆதிதிராவிடர் 32 கோடின்ட்டான், ஏண்டா மொத்தத் தொகையே 4 கோடி இவங்க கொண்டுவந்தது 12 கோடி எம்.ஜி.ஆரால ஒண்ணும் பண்ண முடியல. 1931 லே ஜாதி வாரிக் கணக்கெடுப்பை முடித்தார்கள். அதற்கு முன்பே யார் அன் டச்சபிள் என்று தீர்மானித்து விட்டார்கள் ஒரு பெரிய உண்மையைத் தெரிஞ்சுக்கணும். யார் பிற்படுத்தப்பட்டவன்னு வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு எந்த அரசாங்கமோ நிர்மாணிக்கவில்லை. இந்த ஊரிலே ஒரு பிற்படுத்தப்பட்டவர் ஒரிசாவிலே முற்பட்ட வகுப்பினராக இருக்கக்கூடும். ஒரு ஊருல கவுண்டர், இன்னொரு ஊருல கவுடா, கவுண்டர் எம்.பி.சி, கவுடர் பி.சி. கர்நாடகாவுல தேவ கவுடாவுக்கு சொந்தக்காரர்கள் இந்தக் கவுடாக்கள் எஃப். சி. ஆக, பேக் வேர்ட் கிளாஸை நிர்ணயம் பண்றதுங்கறது ஒரு அரசாங்கத்திற்கு கஷ்டமா இருந்தது.

ஆனா தாழ்த்தப்பட்டவர்களை நிர்ணயம் பண்றது எளிதாக இருந்தது. என்ன காரணம்னா? மூணே காரணம்தான் Unseeable, unapproachable and untouchable- பாக்காம எவன இருக்கணும்னு சொல்றமோ, உங்களுக்குத் தெரியாது, பல பேருக்குத் தெரியாது. திருநெல்வேலி மாவட்டத்திலே புரத வண்ணான்னு ஒரு ஜாதி. எவ்வளவு கொடுமை பாருங்க. புரத வண்ணான்னு ஒரு ஜாதி, அவர்கள் சாயங்காலம் 6 மணிக்கு மேலதான் வெளிய வரணும். சாயங்காலம் 6 மணிக்கு மேல வந்து எல்லா வீட்டுலயும் துணி எடுத்திட்டுப் போயி இராத்திரி 12 மணிக்குப் போய் தொவைச்சிட்டு அதிகாலை 6 மணிக்கு போய் எல்லார் வீட்டுலயும் திருப்பிக் கொடுத்திட்டு பகல் முழுக்க படுத்துக்கணும். பகலில் நடமாடினால் கட்டிவைத்து உதைத்தார்கள் புரதவண்ணார்னு ஒரு ஜாதிய. 1927 வரைக்கும். இப்ப ஒரு 50, 60 வருடத்திற்கு முன்னாடி வரைக்கும் புரத வண்ணார்ங்கற ஒரு ஜாதி சூரியனைப் பார்த்ததில்லை. வெளிச்சத்தைப் பார்த்ததில்லை. தேர் எப்படி இருக்கும்னு அவனுக்குத் தெரியாது. சாமி எப்படி இருக்கும்னு தெரியாது. தெரு எப்படி இருக்கும்னு தெரியாது. காலை 6 மணிக்குள் இரவுக்குள்ளாகவே தன்னுடைய வாழ்க்கைச் சக்கரத்தை முடித்துக் கொண்ட ஒரு கேவலமான நிலை புரத வண்ணார்ங்கற ஒரு ஜாதிக்கு இருந்தது. ஆக untouchability is visible - யார் யாரெல்லாம் தாழ்த்தப்பட்டவன்? யார் யாரெல்லாம் தீண்டாமைக்கு ஆட்படுகிறான் என்கிற பட்டியல் வெள்ளைக்காரனிடம் இருந்தது. இது அம்பேத்கருக்கு ஈஸியா இருந்துச்சு. வட்டமேசை மாநாட்டுக்குப் போகும்போதும் சரி, வெள்ளைக்காரன் போனபிறகு அவர் வரைவுக்குழுவிலே இருந்த போதும் சரி, யார் யாரெல்லாம் தாழ்த்தப்பட்டவன் என்கிற பட்டியல் மாநில வாரியாக என்பது அம்பேத்கரினுடைய கையில் இருந்தது. கையில் இருந்த காரணத்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடுன்னு முடிவு பண்ணிட்டார்.



அப்ப பேக்வேர்ட் க்ளாசுக்கு ஒண்ணுமே செய்யலயா? பேக்வேர்ட் க்ளாசுக்கு செஞ்சதே அம்பேத்கர்தான். ஆனா எவ்வளவு செஞ்சார்ங்கறது தான் முக்கியம். இன்றைக்கும் டிபேட்ல இருக்கு. Constituent Assembly டிபேட்ல இருக்கு. அரசியல் சட்டத்தினுடைய 16 வது பிரிவு உப பிரிவு 4 வது உட்பிரிவுதான் employment opportunity- பத்தி பேசுகிறது. இன்றைக்கு வேகமாகப் பேசிக்கொண்டிருக்கிறோமே Socially and educationally backward என்று. இந்த Socially and educationally backward என்கிற வார்த்தையை முதன்முதலாக வரையறுத்தவர் அம்பேத்கர். அதுக்கு முன்னாடி any class என்று இருந்தது. Any class which was not adequately represented - இது தான் வரைவுத் தீர்மானம். 16 வது பிரிவில் இராஜேந்திர பிரசாத் தலைமையில் அம்பேத்கர் மட்டுமே இருந்து கடைசிவரை எழுதிய அந்த வரைவுக் குழு விவாதத்தைப் படித்துப் பார்த்திங்கன்னா, 16 ( 4 ) லிலே முதல்ல என்ன சொன்னார்கள் என்றால், எந்த சமூகம் போதிய அளவுக்கு பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லையோ அரசுப்பதவிகளில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்று இருந்தது. அதை மாற்றி, பிரிவு 15(4) ஐச் சேர்த்து, அது அப்படி இருக்கக்கூடாது Any class ன்னு இருக்கக்கூடாது socially and educationaly backward class -ன்னு இருக்கணும் என்று போட்டவர் அம்பேத்கர். இது ஒன்று. இன்னொன்று,

அம்பேத்கர் 10.10.1951 இல் ரிசைன் பண்றார். ஒரு அமைச்சர் ரிசைன் பண்ணிட்டு வெளியே வருகிற பொழுது நான் ஏன் ரிசைன் பண்றேன்கறதுக்கு காரணங்கொடுக்கணும். நான் ஒரு கேபினட் அமைச்சர், கேபினட் அமைச்சர் நான் நாளைக்கு ரிசைன் பண்ணினேன்னு வச்சுக்கங்க, I am entitled to file a paper, why I am resigning நாட்டு மக்களுக்குத் தெரியணும் இல்லையா? நான் ஏன் ரிசைன் பண்றேன்னு தெரியணும் இல்லையா? அதுக்காக அரசியல் சட்டத்திலேயே ஒரு அமைப்பு இருக்கு. ப்ரொசிஜர்லயே இருக்கு பார்லி மெண்ட் ப்ரொசிஜர்ல. அப்படி அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்து கொண்டு வெளியேறி வருகிற பொழுது அவர் ஒரு ஆவணத்தை சமர்ப்பிக்க முயற்சி செய்கிறார். அதற்கு நேரு அரசாங்கத்தால் அனுமதி கொடுக்க முடிய வில்லை. அவர் வெளிய வந்ததும் அந்த பேப்பரைக் கொடுத்துவிடுகிறார். இதத்தான் நான் பார்லிமெண்டில் படிக்கிறேன்னு. அதில அவர் சொல்கிறார்,

அவர் ஒரு மிகப்பெரிய பொருளாதாரவாதி. பெரிய பொருளாதார வாதி Problem of rupee- ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தை இன்றைக்கும் மன்மோகன்சிங் படித்துக்கொண்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் அவரே பதிவு செய்திருக்கிறார். The evaluation of the provincial finance in British India அப்படின்னு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரைக்கு மிகப் பெரிய பாராட்டுதல்கள் எல்லாம் கிடைச்சிருக்கு. ஆக, நாணயத்தின் மதிப்பு, உலகச் சந்தையின் மதிப்பு என்று இன்றைக்குப் பேசுகிற அந்த மதிப்பையெல்லாம் அவர் பேசியவர். என்னை ஏன் அந்த Finance

Committee நிதி சம்மந்தப்பட்ட குழுவில் ஏன் போடவில்லை என்பதற்காக ஒரு காரணத்தைச் சொல்லுகிறார்.

இரண்டாவது காரணம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு தரவேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கு அரசியல் சட்டத்தினுடைய பிரிவுகளில் நான் உரிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறேன். அரசியல் சட்டத்தின் 340 வது பிரிவு to investigate the backwardness of the community in each state ஏனென்றால் என்கிட்ட பட்டியல் கிடையாது. யார் பிற்படுத்தப்பட்டவன்? தமிழ்நாட்டில் வன்னியர் பிற்படுத்தப்பட்ட வரா? முக்குலத்தோர் பிற்படுத்தப்பட்டவரா? நாடார் பிற்படுத்தப்பட்டவரா என்கின்ற பட்டியல் எனக்குத் தெரியாது. கேரளாவிலே யார் பிற்படுத்தப் பட்டவன்? மகராஷ்டிரத்திலே, ஒரிசாவிலே யார் பிற்படுத்தப்பட்டவன் என்கின்ற பட்டியல் கிடையாது. ஆனால் அரசியல் சட்டத்தில் 340 வது பிரிவில் நான் சொல்லியிருக்கிறேன். A commission should be appointed to investigate the backwardness of the community and to give representations to all the corners என்று அவர் சொல்லியிருக்கின்றார். இப்படி ஒரு ஆணையம் அமைக்கவேண்டுமென்று அரசியல் சட்டத்தில் நான் எழுதி விட்டேன். நேருவிடம் நான் பலமுறை குறிப்பிட்டு சொல்லி யிருக்கிறேன். இந்த ஆணையத்தை முறையாக ஒழுங்குபடுத்தி ஓராண்டு, இரண்டு ஆண்டு களுக்குள்ளாக ஜாதிப்பட்டியல் எல்லாம் எடுத்து அவர் களுக்கு விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு தரவேண்டுமென்று நாடாளுமன்றத்திலும், நேருவிடத்திலும் பலமுறை கூறிவிட்டேன். ஆனால் அவர்கள் அதைச் செய்ய மறுக்கிறார்கள் என்று இரண்டாவது காரணம்.

மூன்றாவது காரணம். ரொம்ப முக்கியமான காரணம். Hindu Code Bill இன்றைக்கு நாம் சொல்லுகிறோம். உடனே இலேசா பிடிக்க லேன்னாக்கூட டைவர்ஸ்ங்கறான் இன்றைக்கு. பிடிக்கலேன்னா மண முறிவு. புருசன் பொண்டாட்டிக்குள் தகராறு. மண முறிவு. இந்த மண முறிவை ஒரு காலத்தில் முடியாது என்று சொன்னார்கள். பெண்களுக்குச் சொத்துரிமை தந்தவர் தலைவர் கலைஞர். ஆனால் இந்த சொத்துரிமையை 1950 களில் Hindu Code Bill லில் கொண்டுட்டு வர்றார் அம்பேத்கர். ஒரு சாதியம் சார்ந்த இந்த இந்து மதத்தில் என்னென்ன முன்னேற்றங்களை, என்னென்ன மறுமலர்ச்சியை திருமணத்தில், சொத்தில் உள்வாங்கிக் கொள்கின்ற அல்லது அகமண முறையில் உள்வாங்கி ஒரு வாழ்வியல் ஆதாரங்களில் எப்படிப் பட்ட நடைமுறையில் சிவில் சட்டம் இருக்க வேண்டுமென்று Hindu Code Bill சொல்கிறது. அந்த Hindu Code Bill பற்றி அவர் சொல்லுகிறபோது, ரொம்பத் தெளிவாகவே சொல்கிறார்: இது வந்து ஒரு மிகப்பெரிய, இதுவரை யாரும் எடுத்திராத ஒரு மிகப்பெரிய முயற்சி. இந்த முயற்சியை நான் எடுக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு நேருவிடம் நான் கேட்ட போது, நேரு ஒப்புக்கொண்டார். ஆனால் என்ன காரணத்தினாலோ, தன்னை Agnostic



என்று சொல்லிக்கொண்ட நேரு, தன்னை பகுத்தறிவுவாதி என்று சொல்லிக் கொண்ட நேரு, ஜாதி கிடையாது என்று சொல்லிக்கொண்ட நேரு இந்து மதத்தில் நான் கை வைப்பதை, பெண்களுக்கு சொத்துரிமை கொடுப்பதை, பெண்களுக்கு மணமுறிவு வழங்குவதை, பெண்களுக்குத் திருமணத்தில் சில சலுகைகளை வழங்குவதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார். மூதாதையர் சொத்தில் பெண்களுக்கு உரிமைவேண்டும் என்று நான் குறிப்பிட்டு இருக் கிறேன். இந்த மாற்றங்களையெல்லாம் செய்வதற்கு நேருவும், மந்திரி சபை யும் ஒப்புக் கொள்ளாத காரணத்தினால் நான் வெளியேறுகிறேன் என்று அவர் சொல் கிறார். என்ன காரணம்.

ஒன்று, Finance Committee - யில் தன்னை ஏன் போடவில்லை? இரண்டு, பேக் வோர்ட் க்ளாஸ் கமிஷன் சொல்லி இத்தனை ஆண்டுகால மாயிற்றே அவர்களுக்கு ஏன் இன்னும் நீங்கள் இடஒதுக்கீடு வழங்குவதற்கு எந்தக் காரணமும் சொல்லவில்லை, அந்த ஆணையத்தை ஏன் அமைக்கவில்லை. Hindu Code Bill ஏன் தரவில்லை என்றுதான் அவர் தன்னுடைய இராஜினாமாக் கடிதத்தைத் தருகிறார். ஆக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்ய வேண்டும். செய்யத் துணிந்தவர் அம்பேத்கர். அதற்கான எல்லா அடிப்படை ஏற்பாடுகளையும் அரசியல் சட்டத்திலும் , அவர் பின்னால் கொண்டு வந்த சட்டமசோதாவிலும் கொண்டு வந்து சேர்த்தவர் அம்பேத்கர்.

இதை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெரியார் காந்திக்கு எதிராக அம்பேத்கருக்கு எழுதிய தந்தியை புரிந்து கொள்ள வேண்டும். இந்த இரண்டு தலைவர்களும், இரண்டு தளத்தில் சிறு சிறு மாற்றங்களோடு இயங்கினாலும்கூட, அவர்களுடைய வாழ்க்கையெல்லாம், தன்னுடைய வாழ்நாளெல்லாம் இந்த மக்கள் கல்வியால், பொருளாதாரத்தால் பிற்படுத்தப் பட்ட இந்த மக்கள் வாழவேண்டுமென்பதற்காக அதற்கு எதிராக இருக்கிற கொள்கைகளையெல்லாம் தகர்த்து எறிந்தவர்கள். கடைசியாக ஒரு கேள்வி. இவர் இன்றைக்கும் தேவைப்படுகிறாரா? என்று கேட்கிறவர்கள் இருக் கிறார்கள்.

பெரியார் இவ்வளவெல்லாம் பேசினார் சரி. இதெல்லாம் இருக்கு தான்னு கேக்குறார். 1973 ல அவருடைய பிறந்த நாளில் பெரியார் சொன்னத கடைசியா நான் வாசிக்கணும் .

“50 வருடகாலமாக சுயமரியாதை இயக்கம் சாதித்தது என்ன என்று பார்த்தால், சிறிது படிப்பு, சிறிது உத்யோகம் பெற நேர்ந்ததோடு அரசியலில் பிராமணர்களின் கொட்டத்தை நல்ல அளவு அடக்கிற்று என்பதல்லாமல், சமுதாயத்துறையில் இழிவும், பொருளாதார ஒடுக்கலும் நல்ல அளவுக்கு பலம் பெற்றுவிட்டது என்றுதான் நான் சொல்லுவேன்”.

இது பெரியார் சாகிறவரைக்கும் சொன்னார். பெரியார் சாகிற போதுகூட தான் வெற்றிபெற்று விட்டதாக எப்போதும் சொல்லிக்கொண்டவரல்ல. இன்றைக்கும் என்ன நடக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டதைப் போல சேதுத்திட்டம் இன்று நிறைவேறாததற்குக் காரணம் இந்த இந்துத்துவா என்கிற அமைப்பு, இந்துத்துவா என்கிற கொள்கை.

இன்னொன்னு வரலாற்றைத் திரிப்பதற்குக் காரணமாக இருப்பது இந்துத்துவா. கடந்த பி.ஜே.பி ஆட்சியில் ரோமிலா தாப்பரும், டி.டி.கோசாம் பியும், ஹபீப்பும் எழுதிய திராவிட இயக்க சமுதாயம் என்றால் என்ன? சிந்து சமவெளி நாகரீகம் என்றால் என்ன? என்பதை விளக்கினார்கள். சிந்து சமவெளி நாகரீகத்தில் காளை மாடு இருந்தது. சிவபெருமான் வழிபாடு இருந்தது. அங்கிருந்தவர்கள் உலகத்தின் மூத்த குடிகள். எகிப்திலே பிரமிடுகள் வருவதற்கு முன்னால், நைல் நதிக்கரையில் நாகரீகம் அரும்புவதற்கு முன்னால் சிந்து சமவெளி நாகரீகம், சைனா வினுடைய பெருஞ்சுவர் வருவதற்கு முன்னால் சிந்துசமவெளி நாகரீகம் உயர்ந்திருந்தது. அதற்குச் சொந்தக்காரர்கள் தென்னிந்தியாவிலே இருக்கக்கூடிய திராவிடர்கள் என்கின்ற அந்த வரலாற்றைப் புரட்டி, இல்லை. அது காளை மாடு இல்லை, குதிரைதான். அது சிந்து சமவெளி அல்ல. இந்து சமவெளி. வெளியே இருந்து ஆரியர்கள் வரவில்லை. இங்கேதான் இருந்தார்கள் என்கின்ற வரலாற்றுப் புரட்டை இன்றைக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஜெய்பால் ரெட்டிதான் ஒருமுறை சொன்னார், பார்லிமெண்ட்ல. டெரரிஸ்ட்டபத்தி பேசிக்கிட்டு இருந்தாங்க. அவர் சொன்னார், நேரடியா துப்பாக்கியை எடுத்துக்கொண்டு ஒரு நாட்டிலுள்ள மனிதர்களைச் சுடுவது என்பது வேறு அது டெரரிஸ்ட். ஆனால் முரளி மனோகர் ஜோஷி இருக்கிறாரே இவர் டெக்ஸ்ட் புக் டெரரிஸ்ட் என்று ஜெய்பால் ரெட்டி சொன்னார். பாடத்திட்டத்தில் ஒரு பயங்கரவாதி, பாடநூல் பயங்கரவாதி. வரலாற்றைத் திரித்துக் கூறுகிற இந்துத்துவா அமைப்புகள் இன்னமும் இருந்து கொண்டிருக்கிறது. சேது சமுத்திரத் திட்டத்தை முடக்கிப் போடுவதற்கு இன்னமும் இந்துத்துவா இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் பெரியாரும், அம்பேத்கரும் இரு விளக்கு களாக உள்ளனர், இந்த இருளை நீக்குவதற்கு இந்த விளக்குகளை இரண்டு கைகளிலும் ஏந்திப் போராடுவதற்கு முன்வருவோம். அதுதான் இந்தக் கருத்தரங்கத்தின் பயன் என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.